விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 21 புதன்கிழமை (05.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 230

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-9975)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

### அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும்

# பாராளுமன்ற தேர்தல் இன்று

## நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிப்பு



(கொழும்பு)

அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் இலங்கையின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கவுள்ள மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் இலங்கையின் 9ஆவது பாராளுமன்ற தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. பொதுத் தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறையில்

## பேருந்து மீது கல்வீச்சுத் தாக்குதல்

(கரணவாய்)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டி ஒன்றின் மீது கல் வீசித தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இலங்கைபோக்குவரத்துச் சபையின் 23

### விபரீத முடிவெடுத்த

## பருத்தித்துறை இளைஞன் மரணம்



(கரணவாய்)

பருத்தித்துறை 23

### பொதுமக்களே விழிப்பாக இருங்கள்

## விசமப் பிரசாரங்கள் செய்யப்படலாம்

(யாழ்ப்பாணம்)

இன்று தேர்தல் நடைபெறுகின்ற நிலையில், விசமப் பிரசாரங்களைப் பரப்புகின்ற முயற்சிகள் இடம்பெறலாம் எனவும் இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடக் கூடிய அமைப்புகள் 23

### வியாழன் நள்ளிரவு முடிவு வெளியிடப்படும்

## தேர்தலுக்கான பாதுகாப்பில் எந்தவித பிரச்சினையும் இல்லை

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

இன்று நடைபெறும் பொதுத் தேர்தலின் இறுதி முடிவை வியாழக்கிழமை நள்ளிரவுக்கு முன்னர் வெளியிடக் கூடியதாக இருக்கும் என்று 23

### வாக்குப் பெட்டிகளை கொள்ளையடித்தால்

## துப்பாக்கிச் சூடு நடத்த பொலிஸாருக்கு அதிகாரம்

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்குச் சாவடியில் வாக்குப் பெட்டிகளைக் கொள்ளையிட முயற்சி செய்தால் அல்லது குழப்பத்தை விளைவிக்க முயன்றால் துப்பாக்கிச்சூடு நடத்த பொலிஸாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பில்பொலிஸ் 23

## தேர்தல் அமைதிக் காலத்திலும் பிரசாரங்கள்

### கபே குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் தற்போதைய அமைதியான கால கட்டத்தில் தேர்தல் சட்ட விதிகளை கட்டாயமாக கடைப்பிடிக்குமாறு அனைத்து அரசியல் கட்சி 23

## ஏற்பாடுகள் பூர்த்தி

- வடக்கில் 8,58,868 பேர் வாக்களிக்கத் தகுதி
- 13 ஆசனங்களுக்கு 735 பேர் போட்டி
- 968 வாக்களிப்பு நிலையங்கள்
- 14,076 அதிகாரிகள் பணியில்
- 650 சுகாதார அதிகாரிகள் களத்தில்

## வன்முறைகள் இடம்பெறலாம்

### படையினர் குவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ள நிலையில் வன்முறைகள் நிகழக்கூடும் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் 23

### காலை 7 மணிக்கே வாக்களிப்பு ஆரம்பம்

## அச்சமின்றி வாக்குரிமையை தவறாது பயன்படுத்துங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

எனவே அச்சமின்றி சென்று வாக்குரி 23

## சுகாதார நடைமுறையுடன் காலையிலேயே வாக்களியுங்கள்

### யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)

வாக்காளர்கள் காலையிலேயே சென்று வாக்களிக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று இடம்பெறவுள்ள தேர்தல் தொடர்பாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"நேற்று காலையில் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வர்த்தக வங்கிகளுக்கு இன்று அரைநாள் விடுமுறை

(கொழும்பு)

இலங்கையில் இன்றையதினம் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வர்த்தக வங்கிகளுக்கு அரைநாள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வங்கிகளை நேரத்திற்கு முன்னரே மூடுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பு திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது.

வங்கி கிளைகளை திறந்து வைக்கும் நேரங்கள் வங்கி கிளைகளுக்கு முன்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சில வங்கிகள் மற்றும் கிளைகள் திறந்து வைக்கப்படும் நேரத்தில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகின்றது.

அதற்கமைய இன்றைய தினம் வங்கியின் வழமையான செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-3)

# தேர்தல் சட்டமீறல்களில் ஈடுபடுபவர்களை படம் பிடிக்க

## பொலிஸாருக்கு வீடியோ கருவிகள்

(கொழும்பு)

தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபடுபவர்களை வீடியோ பதிவு செய்ய நடவடிக்கையெடுத்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், எஸ்.எஸ்.பி. ருவன் குணசேகர, அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் அதற்கேற்ப கமராக்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கை நடந்தால் இது நீதிமன்றத்தின் முன் வீடியோ ஆதாரமாக பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இதற்கிடையில், நாடு முழுவதுமுள்ள 12,984 வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் தலா 2 பொலிஸார் வீதம், 25,998 பொலிஸார் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

64 பிரதான வாக்கெண்ணும் மையங்களின் பாதுகாப்பிற்காக- ஒவ்வொரு மையத்திற்கும் 52 பொலிஸார் வீதம், 3328 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.ஒவ்வொரு வாக்கெண்ணும் மையத்திற்கும் வெளியே 45 எஸ்.டி.எஃப் வீரர்கள் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், நாடு முழுவதும் 121 வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

# மரண அறிவித்தல்

பிறப்பு
12
-
10
-
1997



இறப்பு
03
-
08
-
2020

## செல்வன் ஜெயரத்தினம் ஜோய்மரின்ராஜ்

*பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் ஜெயரத்தினம் ஜோய்மரின்ராஜ் அவர்கள் திங்கட்கிழமை (03.08.2020) அன்று அகால மரணமானார்.*

*அன்னார் மரியாம்பிள்ளை-ஜெயரத்தினம் மேரிறொசலின் ஆகியோரின் அன்பு மகனும் அமல்ராஜ் (ஆசிரியர் -முல்லைத்தீவு றோ.க.பெண்கள் பாடசாலை), கட்சன் அனோஜன் (விளையாட்டு பயிற்றுநர், யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்), ஜெல்சன், லொசிங்கரன் (மாணவன், யா/ஹாட்லி கல்லூரி) ஆகியோரின் சகோதரனும் பீற்றர் புஷ்பம் அவர்களின் அன்பு பேரனும் ஆவார்.*

*இறுதி நல்லடக்க திருப்பலி புதன்கிழமை (05.08.2020) இன்று பிற்பகல் 2.00 மணிக்கு தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

(C-9990)

இல.225, தும்பளை வீதி,
பருத்தித்துறை.

அமல்:- 077 437 1748
கட்சன்:- 077 829 3758

தகவல்:-
குடும்பத்தினர்

# தேர்தல் கடமைகளில் 69 ஆயிரம் பொலிஸார்

(கொழும்பு)

தேர்தல் கடமைகளுக்காக 69 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.தேர்தல் கடமைகளுக்காக பொலிஸ் நடமாடும் சேவை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

3 ஆயிரத்து 69 பொலிஸ் நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிக மாக சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் 10 ஆயிரத்து 500 பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

# வாக்குப் பெட்டிகளை எடுத்து சென்ற பேருந்து விபத்து

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை கொண்டு சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தொன்று முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று காலை 11.30 மணியளவில் காலியிலிருந்து உதுமக நோக்கிச் சென்ற பேருந்து ஒன்றுடன் ஹியாரே சந்தியில், எதிர் திசையில் வந்த முச்சக்கர வண்டி மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி கரபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் அக்மீமன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

# இலங்கை முழுவதும் 66 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைப்பு

(கொழும்பு)

2020ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணிகள் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனடிப்படையில் வியாழக்கிழமை அதிகாலை 7 மணி மற்றும் 8 மணிக்கு மாவட்டங்களில் வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளது.

நாடு முழுவதும் 66 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்க முடியும்.

தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கட்டம் கட்டமாக பிரதிநிதிகளுக்கு வாய்ப்பை வழங்க முடியும்.

இதனைத் தவிர வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லுதல், முத்திரையிடுதல், தேர்தல் நடைபெறும் தினம் இரவில் கண்காணிப்பில் ஈடுபடுவதற்காக அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் பிரதிநிதிகளை நியமிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-3)

# கொரோனாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படாமலும் போகலாம்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

கொரோனா வைரஸிற்கு உடனடி தீர்வு என்ற ஒன்று தற்போதைக்கு இல்லை என்றும் ஒரு சில சமயங்களில் கொரோனாவிற்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படாமலும் போகலாம் என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் சீனாவில் பரவ தொடங்கிய கொரோனா வைரஸ் தற்போது தீவிரம் அடைந்து உலக நாடுகள் அனைத்தையும் கடுமையாக பாதித்துள்ளது.

இந்நிலையில் ஜெனிவாவில் நடந்த ஒன்லைன் செய்தியாளர் கூட்டத்தில் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் டெட்ரோஸ் அதானோம்



கெப்ரேயஸ் கூறிய செய்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் கூறியதாவது, "கொரோனா நோயை குணப்படுத்த கண்டுபிடிக்கப்பட்ட பல தடுப்பூசிகள் இப்போது 2ம் மற்றும் 3ம் கட்ட மருத்துவ பரிசோதனைகளில் உள்ளன என தெரிவித்தார். (ம-3)

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில்

# 5 இலட்சத்திற்கு மேற்பட்டோர் வாக்களிக்கத் தகுதி

## சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள்

### யாழ்.மாவட்ட அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

**யாழ்.தேர்தல் மாவட்டத்திலே 5 இலட்சத்து 71 ஆயிரத்து 845 பேர் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.நிர்வாக மாவட்டத்தில் 4 இலட்த்து 79 ஆயிரத்து 584 பேரும் கிளிநொச்சி மாவட்டத்திலே 92 ஆயிரத்து 264 பேரும் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்.நிர்வாக மாவட்டத்திலே 508 வாக்களிக்கும் நிலையங்களும், கிளிநொச்சி மாவட்டத்திலே 107 வாக்களிப்பு நிலையங்களும் மொத்தமாக யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 615 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. யாழ் நிர்வாக மாவட்டத்தில் 73 வாக்கெண்ணும் நிலையங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 14 வாக்கெண்ணும் நிலையங்களும் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 30 பேர் வரையில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் வாக்களிப்பதற்கும் ஏதுவான சந்தர்பங்கள் வழாங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான ஏற்பாடுகள் 26 வாக்களிப்பு நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இன்று வாக்களிப்பு செயற்பாடுகள் முடிந்தவுடன் வாக்குப் பெட்டிகள் யாழ்.மத்திய கல் லூரி மத்திய நிலையத்திற்கு எடுத்து வரப்படும். நெடுந்தீவிற்கான வாக்குப் பெட்டிகள் வான் படைகளின் உதவியுடனும், ஏனைய தீவுப்பகுதிகளிலுள்ள வாக்குப் பொட்டிகள் கடற்படையின் உதவியுடனும் ஏனையவை தரைமார்க்கமாக பொலிஸாரின் பாதுகாப்புடன் கொண்டு வரப்படவுள்ளது. நாளை 6 ஆம் திகதி முதற்கட்டமாக காலை 11 தொடக்கம் 12 மணிக்கிடைப்பட்ட நேரத்தில் கட்சிகளின் பெறுபேறுகளை அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (5-8)

# பேனாக்களை விநியோகிக்க வேண்டாம் உதவித் தேர்தல் ஆணையாளர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கட்சிகளின் சின்னங்கள், வேட்பாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பேனாக்களை வாக்காளர்களுக்கு விநியோகிக்க வேண்டாம் என கட்சிகளின் பிரதிநிதிகளிடம் யாழ்.மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இம்முறை சுகாதார நடைமுறைகளை பின்பற்றும் நோக்கில் வாக்காளர்கள் கறுப்பு அல்லது நீல நிற பேனாக்களை வாக்களிக்க வரும் போது எடுத்து வருவது விரும்பத்தக்கது என அறிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் சில கட்சியினர் அல்லது கட்சி செயற்பாட்டாளர்கள் தற்போதே கட்சி சின்னங்கள், வேட்பாளர்களின் பெயர்கள், வேட்பாளர்களின் இலக்கங்கள் பொறிக்கப்பட்ட பேனாக்களை வழங்குவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு அந்த பேனாக்களை வாக்காளர்கள் கொண்டு செல்வது தேர்தல் விதிமுறை மீறலாக கருதப்படும், அதே வேளை மற்றைய கட்சி முகவர்களும் அது தொடர்பில் முறையிடுவார்கள். இதனால் தேவையற்ற சிக்கல்கள் ஏற்பட்டு நேர விரயம் ஏற்படும். ஆகவே கட்சி சின்னங்கள், பெயர்கள், விருப்பிலக்கங்கள் உள்ளிட்டவை பொறிக்கப்பட்ட பேனாக்களை வாக்காளர்களுக்கு விநியோகிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர். (5-8)

# குருதிக்கு தட்டுப்பாடு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகை குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சராசரியாக நாளொன்றிற்கு 40 தொடக்கம் 50 பைந் குருதி எமது இரத்த வங்கியிலிருந்து விநியோகிக்கப்படுகின்றது. ஆகவே இதனை கருத்தில் கொண்டு ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் நிறைவடைந்த குருதிக் கொடையாளர்களுக்கு புதிதாக இரத்ததானம் செய்யக்கூடியவர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு சமூகம் கொடுத்து இரத்ததானம் செய்வதுடன் இரத்ததான முகாம்களையும் ஒழுங்கு செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம். மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 077 210 5375 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். (5)

# முறைப்பாடுகள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக தேர்தல் சட்டங்களை மீறி முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தொலைநகல் இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் 9 மாகாணங்களுக்கான தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே அந்தந்த மாகாணங்களில் இடம்பெறும் முறைப்பாடுகள் குறித்து நேரடியாக பொது மக்களால் முறையிட முடியும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதாவது மேல்மாகாணம் - 011-286 9697 கொழும்பு. 011- 286 96 74 கம்பஹா மற்றும் களுத்துறை, மத்திய மாகாணம் - 011- 286 9721, தென்மாகாணம் - 011-286 96 82, வட மாகாணம் - 011-286 9694, கிழக்குமாகாணம் - 011- 286 9709, வட மேல் மாகாணம் - 011-286 9727, வடமத்திய மாகாணம் - 011-286 9663, ஊவா மகாணம் - 011-286 9712, சப்ரகமுவ மாகாணம் - 011-286 9713 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகளை ஏற்படுத்தி முறைப்பாடுகள் குறித்து அறிவிக்க முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ-4)

# கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு புலனாய்வுத்துறையைப் பயன்படுத்திய ஒரே நாடு இலங்கை

## பாதுகாப்பு செயலாளர் பெருமிதம்



(கொழும்பு)

**நாட்டின் ஓரங்கமாகத் தொழிற்படும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் புலனாய்வுத்துறையைப் பயன்படுத்தியதன் விளைவாக கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் மிகுந்த சவால் மிக்க பணியில் இலங்கை வெற்றியீட்டியுள்ளது என்றும் உலகில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் புலனாய்வுத்துறையைப் பயன்படுத்திய ஒரேயொரு நாடு இலங்கை மாத்திரமாகத்தான் இருக்கும் என்றும் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன பெருமிதம் அடைந்துள்ளார்.**

மிலிந்த ராஜபக்ஷவால் எழுதப்பட்ட "கொரோனா டயரி 2020" என்ற புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர், நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்குப் போராடும் அனைத்து முன்னணி வீரர்களுக்கும் இந்தப் புத்தகத்தை சமர்ப்பணம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேலும் அங்கு கூறியதாவது, அனைத்து வளர்ந்த நாடுகளும் கொடூரமான கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு முன்னால் மண்டியிட்டிருந்தபோது, எமது தேசமும் அந்த நோயை அச்சத்துடன் எதிர்கொண்டது. எனினும் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வெற்றிகரமான திட்டங்களின் ஊடாக அதிலிருந்து விடுபட முடிந்தது.

கொடிய வைரஸ் பரவலைத் திறம்படக் கட்டுப்படுத்த முடியும் என்பதில் இலங்கை ஏனைய நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

இந்தப் பாரிய சவாலை முறையானதும், திட்டமிடப்பட்ட வழிமுறைகள் மற்றும் செயற்றிட்டங்கள் ஊடாக எதிர்கொள்வதற்கு வழிகாட்டிய பெருமை நாட்டின் ஜனாதிபதியையே சாரும்.

இந்நிலையில் நாட்டின் ஓரங்கமாகத் தொழிற்படும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் புலனாய்வுத்துறையைப் பயன்படுத்தியதன் விளைவாக கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் மிகுந்த சவால்மிக்க பணியில் இலங்கை வெற்றியீட்டியுள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## இறுதி அரசியலமைப்பு பேரவைக் கூட்டம்



(கொழும்பு)

எட்டாவது பாராளுமன்றத்தின் இறுதி அரசியலமைப்பு பேரவைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை தலைவர் கரு ஜயசூரிய தலைமையில் சபாநாயகரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்களான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மகிந்த சமரசிங்க, பிமல் ரத்நாயக்க ஆகியோரும் சிவில் சமூக உறுப்பினர்களான யாவிட் யூசுப், பேராசிரியர் நாகநாதன் செல்வகுமார், அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான தம்மிக்க தஸநாயக்க ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆரம்பத்தில் அரசியலமைப்பின் உறுப்பினர்களை வரவேற்ற அரசியலமைப்புப் பேரவையின் தலைவரான முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய, மிகவும் வேலைப்பளு நிறைந்த சூழ்நிலையில் கூட்டத்தில் கலந்துகொண்டமை தொடர்பில் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இதன் பின்னர் பொதுச் சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் இழப்பீடு தொடர்பான அலுவலகம் ஆகியவற்றில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது குறித்து அரசியலமைப்பு பேரவை கவனம் செலுத்தியிருந்ததுடன் இவற்றை நிரப்புவது குறித்த இறுதித்தீர்மானத்தை அடுத்த கூட்டத்தில் எடுப்பதற்கும் முடிவு செய்யப்பட்டது. (ஜ-4)

## கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்படவுள்ள குட்டித்தீவு



(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்திற்கு அருகில் கடற்பரப்பில் மண்மேட்டை உருவாக்கி இன்னுமொரு துறைமுக நகரத்தை நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரத்தின் பணிகளை இவ்வருடத்தின் இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள துறைமுக நகரத்தின் பணிகளை துரிதப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் கொழும்பு தலைநகரில் புதிதாக ஒரு நிலப்பரப்பு தோற்றம் பெறும்.

துறைமுக நகரம் மற்றும் புதிய துறைமுக நகரம் அபிவிருத்தி ஊடாக அதிக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெள்ளவத்தை தொடக்கம் பத்தரமுல்லை வரையிலான படகு ஊடான போக்குவரத்து சேவையை நவீனமயப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## இந்தியாவை ஆட்டிப் படைக்கும் கொரோனா 40 ஆயிரத்தை நெருங்கும் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றினால் நேற்று முன்தினம் ஒரேநாளில் மாத்திரம் 50 ஆயிரத்து 629 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 18 இலட்சத்து 55 ஆயிரத்து 331 ஆக அதிகரித்துள்ளதுடன், புதிதாக 810 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 38 ஆயிரத்து 971 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 12 இலட்சத்து 30 ஆயிரத்து 440 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதுடன், மேலும் 5 இலட்சத்து 85 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 8 ஆயிரத்து 944 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக சுகாதாரத் துறை மேலும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## ஆசீர்வாத பூஜையில் ஜனாதிபதி

(கண்டி)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி ஸ்ரீவிஷ்ணு தேவாலயத்தின் ஆசீர்வாத பூஜையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் பிற்பகல் பங்குபற்றினார்.

ஸ்ரீவிஷ்ணு தேவாலயத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை தேவாலயத்திற்கு பொறுப்பான நிலமேக்கள் வரவேற்றனர்.

அங்கு இடம்பெற்ற பூஜை நிகழ்விலும் சமயக் கிரியைகளிலும் ஜனாதிபதி பங்குபற்றினார். எசல பெரஹர நிறைவு விழாவை முன்னிட்டு ஜனாதிபதி நேற்று முற்பகல் கண்டி ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் நாக மரக்கன்றொன்றையும் நாட்டினார்.

ஜனாதிபதியும் அயோமா அம்மையாரும் நேற்று இரவு எசல பெரஹரவை பார்வையிட்டனர். (ஜ-4)

# சிரியாவில் இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல்

(டமாஸ்கஸ்)

சிரியாவின் இராணுவ இலக்குகளை குறிவைத்து இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

தலைநகர் டமாஸ்கஸ் அருகே உள்ள இராணுவச் சாவடிகளில் சேதாரம் ஏற்பட்டதாக கூறிய சிரியாவின் அரச ஊடகம் எந்தவிதமான சேதம் என்று குறிப்பிடவில்லை.

இந்தத் தாக்குதல் குண்டு வைக்கும் முயற்சிக்கான பதிலடி என்று இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் கூறியுள்ளன.

முன்னதாக கோலன் ஹைட்ஸ் பகுதியில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதியில் குண்டு வைக்க முயன்ற நால்வரை கொன்றதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்திருந்தது.

இதற்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் கேணல் ஜொனாதன் கான்ரிகஸ் கூறுகையில் "எந்த அமைப்பு இந்த குண்டு வைப்பு வேலையில் ஈடுபட்டது என்பதை இவ்வளவு சீக்கிரம் சொல்ல முடியாது. ஆனால் இதற்கு சிரியா அரசே பொறுப்பு" என கூறியுள்ளார். (ஜ-4)

# தப்பிய பூனை சிக்கியது

(கொழும்பு)

வெலிக்கடை சிறைக்கு ஹெரோயின் கொண்டு சென்ற நிலையில் அங்கிருந்து காணாமல் போயிருந்த பூனையொன்று நேற்று மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை வளாகத்தில் சுற்றித் திரிந்த போதே இந்தப் பூனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை கட்டுப்பாட்டாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் பொறுப்பின் கீழ் எடுக்கப்பட்ட இந்தப் பூனையின் கழுத்தில் கட்டிவிடப்பட்டிருந்த 2 கிராம் ஹெரோயின், 2 சிம் அட்டைகள், மெமரிகார்ட் என்பன மீட்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் சிறைச்சாலை அறையொன்றில் வைக்கப்பட்டிருந்த இந்தப் பூனை கடந்த 3 ஆம் திகதி காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# புத்தளத்தில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான சந்திரசிறி பண்டார தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தின் புத்தளம், ஆனமடு, சிலாபம், வென்னப்புவ மற்றும் நாத்தாண்டி ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளுக்கான வாக்குப் பெட்டிகளையும் அதிகாரிகளையும் அனுப்பும் நடவடிக்கை நேற்றுக் காலை 7 மணி முதல் புத்தளம் சென் அன்றூஸ் மத்திய கல்லூரி, விஞ்ஞானக் கல்லூரி, பாத்திமா மகளிர் கல்லூரி மற்றும் செய்னப் ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் இருந்து 421 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளும் அதிகாரிகளும் அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த வாக்குப் பெட்டிகளை விநியோகிக்கும் நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஆறு இலட்சத்து 17 ஆயிரத்து 370 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் 13 அரசியல் கட்சிகளையும் 19 சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்த 352 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் தங்கியுள்ள வாக்காளர்களுக்கான 12 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான சந்திரசிறி பண்டார மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சிறைச்சாலை பாதுகாப்பிற்கு விசேட அதிரடிப்படையினர்

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலைகளின் பாதுகாப்பு கடமைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்த உத்தியோகபூர்வ வேண்டுகோளை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய பாதுகாப்பு அமைச்சிடம் முன்வைத்துள்ளார்.

வெலிக்கடை, மகசின், கொழும்பு மற்றும் ரிமான்ட் சிறைச்சாலைகளுக்கும் பெண்கள் சிறைப் பிரிவுகளிலும் இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பூஸா மற்றும் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படை ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சீனாவில் அதிகரிக்கும் புதிய கொரோனா தொற்றாளர்கள்

(பீஜிங்)

சீனாவில் நேற்று முன்தினம் 43 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சீனாவில் குறைந்து கொண்டு சென்ற கொரோனா தொற்று தற்போது மேலும் அதிகரித்து வருகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சீனாவின் பெரும்பாலான கொரோனாத் தொற்றாளர்கள் அந்நாட்டின் வடமேற்கு பிரதேசமான ஜின்ஜியாங்கில் தான் பதிவாகியுள்ளது.

அதேவேளை அந்நாட்டில் கொரோனாவினால் பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கை




84 ஆயிரத்து 428 ஆக உயர்ந்துள்ளதாக சர்வதேச கொரோனா மதிப்பீட்டு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரகத்தி கணபதிப்பிள்ளை



தாயின் மடியில்
08.09.1935

காலன் கையில்
18.07.2019

கணப் பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை விளக்கே!
நீங்கள் இமைப்பொழுதில் எம்மை விட்டு அகல்வீரென
அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத்தெய்வமே அப்பா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்...
ஒவ்வொரு நொடியிலும் இதயத் துடிப்பை போல
உணர்கின்றோம்...
நீங்கள் கடந்து சென்றாலும் எங்கள் அருகில்-நீங்கள்
இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்...

குடும்பத்தினர்

இல.168/2, டச்சு வீதி,
சாவகச்சேரி.

காண்டீபராஜா : 077 360 4014
ஐங்கரன், சேகரன்

(3475)

## பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட **AR 252/20** இல் பாரப்படுத்தப்பட்ட தங்கச் சங்கிலி இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த சான்றுபொருளை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2020.09.27 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5)



யாழ்ப்பாணம் - நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவின் 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் மாலை சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்-ஐ.சிவசாந்தன்)

## ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசனம், கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு, இலங்கை கலைக்கழகம், அரச நாடக ஆலோசனைக் குழு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து நடத்தும் அரச சிறுவர் நாடக விழா போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கமைய கலை நிறுவனங்கள், பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள் (பல்கலைக் கழகம்) ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கல்வியியல் கல்லூரி, வலயம்/ கோட்டக் கல்வித் திணைக்களம் மற்றும் கலை ஆர்வமுடையோர் இப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான சுற்றுநிருபம் மற்றும் விண்ணப்பப்படிவத்தையும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும் 07.09.2020 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களைச் சமர்ப்பிக்குமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன் அறிவித்துள்ளார். (5)

## சவுதியிலிருந்து நாடு திரும்பிய 4 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யா.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையில் 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் 130 பேருக்கான பரிசோதனைகள் யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

அவற்றில் சவுதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பிய நிலையில் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 4 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக கொவிட்-19 விசேட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் வட பகுதியில் பல்வேறு இடங்களிலும் செய்யப்பட்ட பரிசோதனையில் தொற்று ஒருவருக்கும் இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே மக்கள் இது விடயம் தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை.

பொது மக்கள் தங்களது அன்றாட கடமைகளையும் செயற்பாடுகளையும் தொடர்வதுடன் சுகாதார அமைச்சினால் கொவிட்-19 தொற்று நோயைத் தடுப்பது தொடர்பாக வழங்கப்பட்ட சகல அறிவுறுத்தல்களையும் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (5-8)

## யாழ்.இராணுவத் தளபதிக்கு அதிரடி இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவுக்கு அதிரடியாக இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 8 ஆம் திகதி இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இவ்வாறு இடமாற்றமாகி செல்லும் மாவட்ட இராணுவத் தளபதி தொண்டர் படையணியின் தளபதியாக நியமிக்கப்படவுள்ளார்.

மேலும் புதிய இராணுவத் தளபதியாக தற்போது கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் தளபதி செனரத் பண்டார நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரும், தேர்தல் நிறைவடைந்த பின்னர் 2 வாரங்களுக்குள் எந்தவொரு இடமாற்றத்திற்கும் தேர்தல் ஆணைக்குழு அனுமதி பெறப்பட வேண்டும். இதன்படி ஆணைக்குழு அனுமதிபெற்றுக் கொண்டதன் அடிப்படையிலேயே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (5-8)

## ஆதனவரி அறவிடப்பட வேண்டும் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல பகுதிகளிலும் ஆதன வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் குகானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற சாவகச்சேரி பிரதேசசபை அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான்கு வருட காலத்திற்குள் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சகல இடங்களிலும் சோலை வரி அறவிட்டு சபைக்கு வருமானத்தை ஈட்டி அதனூடாக பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டது.

இருப்பினும் கடந்த இரு வருடங்களில் பிரதேசசபைக்கு வந்து கைதடி மற்றும் நாவற்குழிப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஆதன வரி அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை.

சபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஏனைய இடங்களிலும் வரி அறவிட்டு சபையின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (4-5-30)




"JAFFNA GOT TALENT – 2020" எனும் மாபெரும் கலைச் சுற்றுப் போட்டியின் இறுதிச்சுற்று கடந்த 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் "தந்தை செல்வா அரங்கில்" வடமாகாண ஆளுநர் பி .எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் நடைபெற்றது. யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவினுடைய எண்ணக்கருவிற்கும் ஆலோசனைக்கும் அமைவாக நடைபெற்ற இந் நிகழ்வில் மதகுருமார்கள், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், தம்பதியினர் வன்னி , கிளிநொச்சி பாதுகாப்புப் படைத் கட்டளைத் தளபதிகள், வடமாகாண கடற்படைப் பொறுப்பதிகாரி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், வடமாகாண பிரதம செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஜம்மு - காஷ்மீர் கையகப்படுத்தப்பட்டமைக்கு எதிரான நிலைப்பாட்டில் வலுவாக இருக்கின்றோம்

## பாக்.உயர்ஸ்தானிகர் திட்டவட்டம்



(கொழும்பு)

இந்தியாவில் தற்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் கடும் போக்குவாதத் தன்மையை சர்வதேசம் உணர்ந்து கொண்டு இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் பாகிஸ்தான், இந்திய இராணுவத்தினால் சட்டவிரோதமாக ஜம்மு - காஷ்மீர் கையகப்படுத்தப்பட்டமைக்கு எதிரான நிலைப்பாட்டில் தாம் இன்னமும் வலுவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஜம்மு - காஷ்மீர் பகுதி இந்தியாவினால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டு இந்திய இராணுவத்தினால் முற்றுகையிடப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளமையினை நினைவுகூரும் விதமாக இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் தேசிய கீதங்கள் ஒலிக்கவிடப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து ஜம்மு - காஷ்மீர் கையகப்படுத்தப்பட்டமையை பிரதிபலிக்கும் பாடல் ஒன்றும் ஒலிக்கவிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இந்நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான பாகிஸ்தானின் பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட், சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் இந்தியாவினால் ஜம்மு - காஷ்மீர் கையகப்படுத்தப்பட்டமை தொடர்பில் சுட்டிக்காட்டிப் பேசினார்.

இந்திய அரசாங்கத்தினால் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 5 ஆம் திகதி அரசியலமைப்பின் 370 ஆம் பிரிவு நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சட்டவிரோதமான முறையில் ஜம்மு - காஷ்மீரை கைப்பற்றிய இந்தியா, இன்னமும் அப்பாவி காஷ்மீர் மக்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றது.

அவர்கள் தமது சொந்த நிலப்பரப்பிலேயே பெருமளவான அடக்குமுறைகளை எதிர்கொண்டிருக்கின்றனர் என்று அவர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையில் உடன்பட்ட பாதுகாப்புச்சட்டப் பிரகடனத்திற்கு முரணான வகையில் இந்தியா செயற்பட்டு வருகின்றமையை வெளிப்படுத்தும் செயற்பாடுகளையும் பாகிஸ்தான் தொடர்ந்து முன்னெடுக்கும் என்று தெரிவித்ததோடு, காஷ்மீர் மக்களை தம்மிலிருந்து பிரிந்த வேறொரு மக்கள்கூட்டமாகக் கருதவில்லை என்றும் கூறினார்.

மேலும் அண்மைக் காலங்களில் தற்போது ஆட்சியிலிருக்கும் இந்திய அரசாங்கத்தின் கடும்போக்கான தன்மையை சர்வதேசம் உணர்ந்து வருகின்ற அதேவேளை, அதனை அவதானித்துக்கொண்டிருப்பதாகவும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# வெள்ளத்தில் மிதக்கும் மும்பை

(மும்பை)

மும்பையில் கொட்டி தீர்த்த கனமழையால் முக்கிய இடங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. மின்சார ரயில் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

மராட்டிய மாநில தலைநகர் மும்பையின் பல் வேறு இடங்களில் விடியவிடிய கனமழை கொட்டியது. இதனால் காலையும் மும்பையின் முக்கிய இடங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. தாழ்வான பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல் தேங்கி உள்ளது. இதனால், சாரதிகள் கடும் சிரமத் திற்குள்ளாகியுள்ளனர்.

மும்பை மற்றும்அதனை சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு இன்றும் நாளையும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 7 - செவ் 6 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. கட்டாரில் வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு: வெளிநாட்டுப் PR உள்ள பெண்
தொ.இ: B/11050

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: 61 செவ் 1 ல்
தகைமை/தொழில்: HND QS, Trainining.
எதிர்பார்ப்பு: வெளிநாட்டுப் PR உள்ள பெண்
தொ.இ: B/11051

பிறப்பு: 1984 கிறிஸ்தவம்
உயரம்: 6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அமெரிக்காவில் வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு: வெளிநாடு செல்லக் கூடிய படித்த அழகிய பெண்
தொ.இ: B/11052

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 04 செவ் 6 ல் உயரம்: 182cm
தகைமை/தொழில்: Diploma in Bussiness Management. Chef in Germany
எதிர்பார்ப்பு: கனடா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, லண்டன், அமெரிக்கா நாட்டு Citizen உள்ள பெண்.
தொ.இ: B/11053

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 63 - செவ் 1 ல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: பட்டதாரி. முகாமைத்துவ உதவியாளர்.
எதிர்பார்ப்பு: அரச, உயர் தனியார் உத்தியோகம்.
தொ.இ: G/11047

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சுவாதி கி.பா: 56 சூரி,செவ்.1 ல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: சித்த மருத்துவம் இறுதி ஆண்டு.
எதிர்பார்ப்பு: பட்டதாரி. தகுந்த மணமகன்
தொ.இ: G/11048

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 27 - சூரி.செவ் 6 ல்
தகைமை/தொழில்: சுவிஸில் வேலை செய்கின்றார். PR உண்டு
எதிர்பார்ப்பு: ஐரோப்பிய நாட்டு PR உள்ள மணமகன்
தொ.இ: G/11054

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2கி.பா: செவ் 9 ல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. நிரந்தர வேலை.
எதிர்பார்ப்பு: மணமகள் விவாகரத்தானவர். ஒரு பெண் குழந்தை உள்ளது. விவாகரத்தும் ஏற்கப்படும்.
தொ.இ: G/11060

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## தேர்தல் பணிகளுக்காக
# ஆயிரத்து 459 பேருந்துகள் சேவையில்



(கொழும்பு)

பொதுத் தேர்தல் பணிகளுக்காக ஆயிரத்து 459 அரச பேருந்துகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அரச போக்குவரத்து சபை பிரதி பொதுமுகாமையாளர் ஏ.எச். பண்டுக தெரிவித்தார்.

நாடு தழுவியுள்ள வாக்களிப்பு மத்திய நிலையங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினர்களது போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு 192 பேருந்துகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தல் பணிகளுக்கான போக்குவரத்து நடவடிக்கைகள் அனைத்தும் முழுமைப் பெற்றுள்ளன. தூர பிரதேசங்களில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கு வாக்காளர்கள் செல்வதற்கு 800 பேருந்துகளுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவு இடம் பெற்றதன் பின்னர் வாக்குப் பெட்டிகளை பாதுகாப்பான முறையில் வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களுக்கு எடுத்து செல்வதற்கும் மேலதிகமாக, 61 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

வாக்குச்சாவடிகளுக்கு வாக்காளர்கள் செல்வதற்கு நாடுதழுவிய ரீதியில் உள்ள அனைத்து அரச பேருந்து டிப்போக்களிலும் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. எந்நிலையிலும் போக்குவரத்து சேவையில் கால தாமதம் இடம்பெறாது என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# கொரோனா நெருக்கடியை கையாள்வதில் மத்திய அரசு திறம்பட செயற்படவில்லை

## ராகுல் குற்றச்சாட்டு


(டில்லி)

கொரோனா பெருந்தொற்று நெருக்கடியை கையாள்வதில் மத்திய அரசு திறம்பட செயற்படவில்லை என காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி தொடர்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறார்.

தொடர்ச்சியாக தனது டுவிட்டர் பதிவில், மத்திய அரசை இந்த விவகாரத்தில் குற்றம் சாட்டி வரும் ராகுல் காந்தி, மீண்டும் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.


அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்தியாவில் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவால் ஏனைய நாடுகளை விட இந்தியா சிறப்பான நிலையில் இருப்பதாக பிரதமர் மோடி கூறியதை சுட்டிக்காட்டி விமர்சித்துள்ளார். (ஐ-4)

# வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள்




நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்று வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய கிளிநொச்சி திருவையாறு சாந்தபுரம் பகுதியில் 10 கிராம் 8 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைத்தொலைபேசி ஒன்றும் சந்தேக நபரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என மது ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (4-5-316)

## மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு புத்தளத்தில் வாக்களிப்பு நிலையம்




(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் உரிய நேரத்திற்கு வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும், மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட வாக்கு எண்ணும் நிலையமான மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் இம்முறை வாக்களிக்க 88 ஆயிரத்து 842 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களில் புத்தளத்தில் இடம்பெயர்ந்த 5 ஆயிரத்து 807 வாக்காளர்களுக்கு புத்தளத்தில் வாக்களிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புத்தளத்தில் 12 விசேட வாக்களிப்பு நிலையங்களில் இடம் பெயர்ந்த மன்னார் மாவட்ட வாக்களர்கள் வாக்களிக்க முடியும்.

மன்னார் மாவட்டத்தில் 76 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் நிலையங்கள் 15 அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் கடமைகளில் ஆயிரத்து 202 உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

காலை 8 மணி முதல் 10 மணி வரையான நேரப்பகுதிக்குள் 76 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டன.

தேர்தல் கடமைக்கு 130 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை பொறுத்தவரையில் மன்னார் மாவட்டத்தில் இதுவரை எவ்வித அசம்பாவிதமும் இடம் பெறவில்லை.

வாக்களிப்பு நிறைவடைந்தவுடன் வாக்குப்பெட்டிகள் வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கு கொண்டு வரப்படும். தேர்தல் கடமைக்கு 700 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இருந்து புத்தளத்தில் இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்தில் வாக்களிப்பு முடிந்தவுடன் வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புடன் வவுனியா வாக்கு எண்ணும் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும் எனவும் தெரிவித்தார். (4-5-285)


## ஆட்டோ மதிலுடன் மோதி விபத்து முதியவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி மரியன்னை ஆலயத்திற்கு அருகாமையில் யாழ். நகர் நோக்கி வேகமாக வந்த ஆட்டோ வேகக் கட்டுப்பாட்டையிழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ் விபத்தில் வயோதிபப் பெண்மணி ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப் பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-8)



# இராசிபலன்

05.08.2020
ஆடி 21, புதன்கிழமை
துதியை முன்னிரவு 11.03 மணிவரை
அவிட்டம் முற்பகல் 10.30 மணிவரை
சுப நேரம் 4.34 - 6.04 மணிவரை
இராகுகாலம் 12.04 - 1.34 மணிவரை
சந்திராஷ்டமம் - பூசம்
வளவன்


மேஷம்
ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் அதிகரித்து வளம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்
செல்வாக்கு அதிகரிக்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.


மிதுனம்
பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும்.


கடகம்
கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.


சிம்மம்
மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


கன்னி
செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கடன்பாக்கிகள் திடீரென வசூலாகலாம், ஆரோக்கியமான நாள்.


துலாம்
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.


விருச்சிகம்
நண்பர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.


தனுசு
வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார விரோதம் விலகும், போசன நன்மையுண்டு.


மகரம்
பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும்.


கும்பம்
சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.


மீனம்
உறவினர்களின் அன்புத்தொல்லைக்கு ஆளாக நேரிடலாம், கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்குபடுத்திக்கொள்ள முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

இந்த உலகத்திலேயே உனக்கு மிகவும் முக்கியமானவன் நீதான்

# தேர்தல் காலப்பகுதியில் அனர்த்த நிலையை எதிர்கொள்ள விசேட பிரிவு

(கொழும்பு)
பொதுத் தேர்தலுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் எதிர்வரும் சில தினங்களில் அவசர இடர் நிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு 24 மணித்தியாலம் செயற்படக்கூடிய விசேட செயற்பாட்டு பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளை உள்ளடக்கி உடனடியாக செயற்படக்கூடிய விசேட திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்கள் தொடர்பாக அறிவிப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 070 211 7117, 011 366 8031, 011 366 8032, 011 366 8087, 011 366 8016, 011 366 8025 இதற்கு மேலதிகமாக துரித தொலைபேசி இலக்கமான 117 என்ற இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

# உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள சிறை அதிகாரிகளுக்கு துப்பாக்கிகள்

(கொழும்பு)
உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள சிறைச்சாலை அதிகாரிகளுக்கு துப்பாக்கிகள் வழங்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய இந்த அதிகாரிகளுக்காக 9 மில்லி மீற்றர் ரக துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் வெலிக்கடை, மகசின், கொழும்பு சிறைச்சாலை, நீர்கொழும்பு, பூஸா, அங்குணகொல பெலஸ்ஸ, பண்டாரவளை ஆகிய சிறைச்சாலைகளின் அதிகாரிகளுக்கும் புனர்வாழ்வுப் பிரிவின் பிரதானிகளுக்கும் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# லெபனான் வெளிவிவகார அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்

(பெய்ரூட்)
கொரோனா வைரஸ்(கொவிட்-19) தொற்று பரவலால் லெபனானில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் நாசிஃப் ஹிட்டி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.



பொருளாதார நெருக்கடியை சமாளிக்க அரசு எந்தவித சீர்திருத்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாததால் நாசிஃப் ஹிட்டி அதிருப்தியடைந்ததாகவும் அதன் காரணமாகவே அவர், இராஜினாமா செய்ததாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது அந்நாட்டின் பிரதமர் ஹாசன் தியாப் தலைமையிலான அரசுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# கொள்ளை; 17 பேர் கைது

(கொழும்பு)
கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்த உடைமைகள், வாகனங்களைத் திருடிய குற்றச்சாட்டில் 2 பெண்கள் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


நேற்று முன்தினம் இரவு அவ்வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் 3 வாகனங்களையும் இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் உள்ளிட்டவற்றைக் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற போது வீட்டில் யாரும் இருக்கவில்லையென விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சீதுவ பொலிஸார் குளியாப்பிட்டி, உடுபத்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். (ஜ-4)

# நோர்வே கப்பலொன்றில் 41 பேருக்கு கொரோனா



(ஒஸ்லோ)
நோர்வே கப்பலொன்றில் குறைந்தது பயணிகள் மற்றும் பணியாளர்கள் உட்பட 41 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"எம்.எஸ். ரோல்ட் அமுண்சன்" என்ற இந்த கப்பலில் பயணித்த மேலும் நூற்றுக்கணக்கான பயணிகள் தனிமைப்படுத்தப்பட்டு சோதனை முடிவுகளுக்காக காத்திருப்பதாகவும் கப்பலை வைத்திருக்கும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நோர்வே நிறுவனமான ஹர்டிகிரூட்டனுக்கு சொந்தமான இந்தக் கப்பல் வெள்ளிக்கிழமை வடக்கு நோர்வேயில் உள்ள டிராம்சோ துறைமுகத்தை வந்தடைந்தது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கப்பலின் அனைத்து பயணிகளையும் ஹர்டிகுரூட்டன் நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளது.

530 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட இந்த கப்பலில் தற்போது 160 பணியாளர்களும் 177 பயணிகளும் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதேநேரம் கப்பலில் பயணித்த பயணிகளுக்கும் 14 நாட்களுக்குள் தரையிறங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரோல்ட் அமுண்ட்சென் கப்பலில் கொரோனாத் தொற்று ஆரம்பமாவதற்கு முன்னர் ஏதேனும் சுகாதார ஆலோசனை சட்டங்கள் மீறப்பட்டுள்ளதா என்பதை விசாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## எள்ளும் நல்லெண்ணெயும் எள்ளுப்பிண்ணாக்கும்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**"கொளுத்தவினிற்கு கொள்ளுக்கொடு இளைத்தவினிற்கு எள்ளுக் கொடு"**

என்பது அனுபவமொழி. அதாவது புரதச்சத்து, இரும்புச்சத்து, பொசுபரசு, கல்சியம், தயமின் போன்ற முக்கிய சத்துக்கள் அடங்கியதே எள் ஆகும். சித்தமருத்துவத்தில் எள்ளுப்பாவனை முக்கியமாக அறிவுறுத்தப்படுகின்றது. முக்கியமாக வெப்பமான பகுதிகளில் எண்ணெய் பயிராக பயி





ரிடப்படுகிறது. இதன் விதைகள், வேர்கள், இலைகள் அனைத்தும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

எள்ளில் கறுப்பு எள்ளே மருத்துவக்குணங்களை அதிகம் கொண்டது.

கர்ப்பிணித் தாய்மார்கள் முதல் 5 மாதங்களில் இதனை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதிலுள்ள சில வேதியற்சத்துக்கள் கருச்சிதைவை ஏற்படுத்தலாம்.

ஆனால் கர்ப்பிணித்தாய்கள் 7 ஆம் மாதத்திலிருந்து எள்சுட்டாயம்பயன்படுத்தவேண்டும். எள்ளும் பனங்கட்டியும் சேர்த்து துவைத்து 1, 2 உருண்டைகள் வாரத்தில் 3 நாட்கள் பயன்படுத்த வேண்டும். இதனால் இரத்த விருத்தி உண்டாவதுடன் மலச்சிக்கலும் தீரும்.

எள் விதைகளை 30 கிராம் எடுத்து 200 மில்லி நீரில் ஊறவைத்து பருக மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் உதிரச் சிக்கல் தீரும். (குருதி தடைப்படல்)

மூலநோய் உள்ளவர்கள் விதைகளை அரைத்த விழுது 5 கிராம் அளவு (கொட்டைப் பாக்களவு) எடுத்து வெண்ணெயுடன் சேர்த்துச் சாப்பிட்டவர குருதி வெளியேறல் குறையும்.

எள்ளைச் சேர்த்து பக்குவம் செய்த சோற்றை உண்டால் உடல் பலம்பெறும்.

எள் விதைகளை அரைத்து கொதிக்கவைத்து கட்டிகளுக்கு கட்ட அவை பக்குவமடையும்.

இதன் விதைகளை சுத்தம் செய்து பொடி செய்து 2 - 4 கிராம் அளவு எடுத்து தேனுடன் கலந்து காலை, மாலை ஆகிய நேரங்களில் 3 தொடக்கம் 5 நாட்கள் சாப்பிடக் கொடுக்க மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் வயிற்றுவலி தீரும்.

**100 கிராம் எள்ளிலுள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு 5.3 கிராம், புரதம் 18.3 கிராம், காபோவைதரேற்று 25 கிராம், பொசுபரசு 570 மி.கிராம், பீற்றா கரோட்டின் 60 மைக்.கிராம், நியோமின் 4.4 மி.கிராம், ரைபோபிளேவின் 340 மை.கிராம், சக்தி 563 கிலோகலரி, கல்சியம் 1450 மி.கிராம், இரும்பு 10.5 மி.கிராம், தயமின் 1010 மை.கிராம், நார் 2.1 கிராம்

எள்ளிலிருந்து பெறப்படும் நல்லெண்ணெய் சித்தமருத்துவத்தில் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இது உணவுக்கூறாகவும் மருந்துப் பொருட்கள் தயாரிப்பிலும் அனுபான மருந்துகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கொள்ளப்படுகின்றது. அதனால்தான் எள்ளிலிருந்து இந்த எண்ணெய் பெறப்பட்டாலும் எள்ளெண்ணெய் என அழைக்கப்படாமல் நல்லெண்ணெய் என்று அழைக்கப்படுகின்றது. இதனால்தான் மூலிகை எண்ணெய்க் குளியலிலும் நல்லெண்ணெய் முக்கிய இடம்வகிக்கின்றது.

நல்லெண்ணெய் நோய் முதுமையை தவிர்க்கும். உயிர்ச்சத்து A, E இதில் காணப்படுகின்றது. கொலஸ்ரோலை குறைக்கும். அதிலும் முக்கியமாக இரத்தத்தில் கெட்ட கொலஸ்ரோலை அதிகரிக்கவிடாது. இதில் காணப்படும் லெசித்தின் எனப்படும் இரசாயனப்பதார்த்தம் இரத்தக் குழாய்களில் கொழுப்புபடியவிடாது. இளமைத் தோற்றத்துடன் ஆரோக்கியமும் ஏற்படும். நல்லெண்ணெய் நோயை முறிக்கும் முறிவு மருந்தாகும்.

செசாமின் என்ற பொருள் நல்லெண்ணெயில் இருப்பதால் வாதம், இருதய நோய்வராமல் முன்கூட்டியே தடுத்து உடல் உறுதியைப் பேணும். நல்லெண்ணெய் நன்கு சூடுபடுத்தி பயன்படுத்தினால் நோய் எதிர்ப்பு தன்மையைக் கூட்டும். வாழ்க்கையில் வெறுப்பு, கவலை, மனச்சோர்வு போன்ற மன அழுத்தங்களைத் தடுக்கும் பைரோறொபினால் என்ற அமிலப் பொருளும் நல்லெண்ணெயில் இருக்கிறது.

உடல் நலத்தையும் நோய் எதிர்ப்பு ஆற்றலையும் அதிகரிக்கும் முதல்தர எண்ணெய் நல்லெண்ணெய்தான். நல்லெண்ணெய்க் குளியலால் தோல் மிருதுவாகிறது.

மூலநோய், பெண்களுக்கு ஏற்படும் மாத விலக்கு பிரச்சினைகள், தோல்வியாதி உள்ளவர்கள் எள், நல்லெண்ணெய் தாராளமாகப் பயன்படுத்த வேண்டும்.

நல்லெண்ணெய் சேர்த்தால் குடலில் $ca^{++}$, $Po_4^{3-}$ செரிப்பது இலகுவாகும். ஆயுளையும் இளமையையும் எளிதில் நீடிக்க இந்த எண்ணெய் அருமருந்து.

ஒரு பெண் பருவமடைந்த காலத்தில் நல்லெண்ணெய் 30 - 60 மில்லி அளவில் தினமும் பருகக் கொடுக்க வேண்டும். கத்தரிப் பச்சை நல்லெண்ணெய் விட்டு வதக்கியும் கொடுக்கலாம். அதிகளவு நல்லெண்ணெய் விட்டு வதக்க வேண்டும்.

நல்லெண்ணெய் தேகத்திற்குப் பலத்தைக் கொடுப்பதோடு கண் ஒளியையும் (உயிர்சத்து A) கொடுக்கும். மேலும் பல நோய்கள் ஏற்படாமலும் தடுக்கும் நல் லெண்ணெயில் முக்கிய கொழுப்பமிலம் வினோலிக்கமிலம் உண்டு. இது கருப்பை முதலிய உறுப்புக்களின் வளர்ச்சிக்கு அவசியம்.

எமது பாரம்பரிய முறைகளில் ஒரு பெண் பருவமடைந்துவிட்டால் நல்லெண்ணெய், உழுந்து ஆகியவற்றை கூடுத லாக பயன்படுத்திஉள்ளார்கள். ருதுக்காலப்பராமரிப்பில் சினையின் (முட்டை) பெருக் கத்துக்கு நல்லெண்ணெயும் அச்சினையின் வலிமைக்கு உழுந்தும் அவசியமாகும்.


குழந்தைகளின் வளர்ச்சிக்கும் நல்லெண்ணெய்பாவனை அத்தியாவசியமாகிறது. பொதுவாக வினோலிக்கமிலம் என்று அழைக்கப்படும் அத்தியாவ சிய நிரம்பாத கொழுப்பமிலம் நல்லெண்ணெயில் காணப்படுகின்றது. இவ்வகையான கொழுப்பமிலங்கள் உடலில் தயாரிக்கப்படுவதில்லை. அவற்றை உணவு மூலமாகத்தான் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கத் தவறின குழந்தைகளின் வளர்ச்சி குன்றும். முடி உதிர்தல், கரப்பான், புண்கள் ஆறத்தாமதமாதல், குருதி உறையத் தாமதப்படல், கண்பார்வை குன்றல் என்பன ஏற்படும். இதனால்தான் எமது யாழ்ப்பாண மக்களிடையே முன்பு நல்லெண்ணெயின் பாவனை அதிகமாக இருந்தது. இப்போது பல்வேறு எண்ணெய் பாவனையாக மாறியதும் பலநோய்களுக்கு காரணமாக இருக்கலாம். குழந்தை கர்ப்பத்தில் இருக்கும் பொழுதும் பிறந்த சில ஆண்டுகள் வரையும் மூளை வளர்ச்சி துரிதமாக நடைபெறுகிறது.

அதற்கு லியோனிக்கமிலம் மிகவும் அவசியம். தாய்ப்பாலிலும் இம்முக்கிய அமிலம் உள்ளது. எனவே குழந்தைப் பருவத்திலேயே உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை செய்வதாலேயே நல்லெண்ணெய் எனக் கூறப்படுகிறது.

கர்ப்பிணிப்பெண்களும் தினமும் 1 - 2 தேக்கரண்டி நல்லெண்ணெய் குடிப்பது சிறந்தது. நல்லெண்ணெயில் உயிர்ச்சத்து A இருப்பதால் மாலைக்கண் நோய் தாய்க்கும் சேய்க்கும் வராமல் தடுக்கும்.

நல்லெண்ணெய் சீக்கிரத்தில் கெட்டுப் போகாது. உடலுக்கு வலிமைதரும். மேல் நாட்டவர்கள் இதனை ஒலிவ் எண்ணெய்க்குப் பதிலாகப் பயன்படுத்துவர்.

வாரத்தில் 3 நாட்கள் தூய நல்லெண்ணெய் ஒரு மேசைக்



கரண்டி அளவு தினம் எடுத்துக் குடித்தால் உடல்பூரிக்கும். தோல் வியாதிகள் வராமல் தடுக்கும்.

நல்லெண்ணெய் 20 மில்லி 1 முட்டை வெண்கருவுடன் கலந்து பருகினால் இருமல் தணியும். நல்லெண்ணெயை முட்டை வெண்கருவுடன் சேர்த்து முகப் பருக்கள் மீது பூசிவர பருக்கள் மறையும்.

தினமும் காலையில் எள்ளெண்ணெய்யை இரு கண்களிலும் 2 துளி வீதம் விட்டுதலையிலும் பூசி சுட்டாறிய வெந்நீரில் அடுத்துடுத்து 3 நாட்கள் தலை முழுகிவர கண்சிவப்பு, கண்வலி, மண்டைக்குத்து ஆகிய நோய்கள் தணியும்.

நல்லெண்ணெய் மற்றும் சந்தன எண்ணெய் ஆகியவைகளை சம அளவாகக் கலந்து தலைவலிக்கு தடவலாம்.

எள்ளுப்பிண்ணாக்கு கால்நடை தீவனமாகப் பயன்படுத்தினாலும் அதிலுள்ள நிரம்பாத கொழுப்பமிலம் புரதச்சத்தும் நீரிழிவு நோயாளிகள் பயன் படுத்தக்கூடியது. எள்ளுப் பிண்ணாக்கை பொடித்து 8 கிராம் அளவு எடுத்து 200 மில்லி வெந்நீரில் ஊறவிட்டு வடித்து தினமும் அருந்திவரலாம். நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கும்.

எண்ணெய்க் குளியலுக்கு நல்லெண்ணெய் சிறந்தது.

உடல் இளமையோடு இருக்கச் செய்வதற்கும் தோலுக்கும் தசைக்கும் இரத்த ஓட்டம் சீராவதால் தோல் சுருக்கம் விரைவாக நீங்கித் தோல் நோய்கள் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கும். நல்லெண்ணெயில் உயிர்ச்சத்து E வினோலிக்கமிலம், ஸ்டியாரிக்கமிலம், பால்மிற்றிக்கமிலம் போன்ற சத்துக்கள் இருக்கின்றன. எனவே நல்லெண்ணெய் குளியலால் தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் தளர்ச்சியுடனும் பாதுகாக்கப்படுகின்றது.

தோலிற்கு இயற்கையான கவசமாக இந்த எண்ணெய் விளங்குகின்றது. செயற்கை வேதியற் பொருட்களாலான பொருட்களை (Chemical based sunscreen) பயன் படுத்துவதால் தோல் கேடடைகின்றது.

# கடன் என்ற சக்கர வியூகத்தில் சீனாவிடம் சிக்கியுள்ள வளரும் நாடுகள்

ஏழை நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் சீனா வழங்கும் கடன் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) அல்லது வேறு எந்த அரசாங்கம் வழங்கும் கடனையும் விட அதிகம்.

பொருளாதார உதவி, தொழில்வளர்ச்சிக்காக வழங்கப்படும் கடன் என்பவற்றை எப்போதுமே உலக நாடுகளனைத்தும் தமது வெளியுறவுக்கொள்கையின் ஒரு பகுதியாகவே வைத்துள்ளன. ஆனால், சீனாவின் விடயத்தில் "கடன் ராஜீய உத்தி" என்ற சொல் நடைமுறையில் உள்ளது.

உலகப் பொருளாதாரம் குறித்த கல்வி நிறுவனமான, ஜெர்மனியின் கியெல் இன்ஸ்டிட்யூட்டின் பொருளாதார நிபுணர் கிறிஸ்டோஃப் ட்ரெபேஷ் இந்த கடன் ராஜீய உத்தி அல்லது **debt diplomacy** பற்றிக் கூறுகையில், "வளரும் நாடுகளுக்கு சீனா வழங்கும் கடனில் பாதி மறைந்த கடனாகத் தான் உள்ளது." என்று குறிப்பிடுகிறார்.

ட்ரெபேஷ், கார்மென் ரீன்ஹார்ட் மற்றும் செபாஸ்டியன் ஹார்ன் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகளில் வெளிவந்த முடிவுகளின் ஒரு பகுதி இது. இந்தக் குழு 1949 முதல் 2017 வரை சீனா வழங்கிய 5,000 கடன்களை ஆய்வு செய்துள்ளது.

பல ஆதாரங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களை ஆய்வு செய்ததில், உலகின் நிதி அமைப்பில் சீனாவின் உண்மையான பங்களிப்பு குறித்துக் கண்டறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.





### வளரும் நாடுகளுடன் அதன் உறவு என்ன?


வளரும் நாடுகளில், சீனா அதன் வேர்களை வலுப்படுத்தியுள்ளது. பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் கடன் வழங்குவதன் மூலம் இதைச் சாதித்துள்ளது சீனா.

இந்த மறைவான கடன்கள் **(hidden credits)** வெவ்வேறு சீன அமைப்புகளால் வழங்கப்பட்ட கடன்கள். இந்த அமைப்புகள் குறித்த தகவலைப் பெறுவது எளிதல்ல, காரணம், எந்தவொரு சர்வதேச அமைப்பிலும் பதிவு செய்யப்படாதவை இவை. அதனால் தான் இவை **hidden credits** என்று பெயரிடப்பட்டுள்ளன.

### வளரும் நாடுகளுக்கு

இந்த ஒளிவு மறைவுக் கடன்களின் மொத்த அளவு கடந்த இருபதாண்டுகளில் அதிகரித்துள்ளது. இப்போது அது 20 பில்லியன் டொலருக்கும் அதிகமாக உள்ளது என்று இந்த ஆய்வு மதிப்பிட்டுள்ளது. இந்த எண்ணிக்கை நிலுவையில் உள்ள கடனின் ஒருங்கிணைந்த மதிப்பையும் உள்ளடக்கியது.

சீனாவிடமிருந்து அதிக கடன் பெற்ற 50 நாடுகளைப் பற்றி ஆய்வு செய்தால், இந்த நாடுகளில் சராசரி கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **(GDP)**



15 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது என்பதை ஆராய்ச்சி காட்டுகிறது. இது குறித்து, 2016 வரையிலான புள்ளிவிபரங்கள் மட்டுமே கிடைக்கின்றன.

"நேரடிக் கடன்களின்" பெரும்பகுதி சீன அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் இரண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் - சீன வளர்ச்சி வங்கி மற்றும் சீன எக்சிம் வங்கி - அதாவது ஏற்றுமதி இறக்குமதி வங்கி. ஆனால், சீனா மற்ற நாடுகளுக்கு கடன் வழங்க, மறைமுக அமைப்புகளும் உள்ளன.

அத்தகைய கடன்களைக் கண்டுபிடிப்பது மிகவும் சிக்கலான பணியாகும். ஏனென்றால், அரசுகளுக்கிடையிலான கடன்களாக வெளிப்படையாக வழங்கப்படுவது அரிதாகவே உள்ளது.

கடன்களில் பெரும்பாலானவை அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களுக்கானவையாகவும் அவற்றைப் பெறும் நிறுவனங்களும் அரசுக்குச் சொந்தமானவையாகவுமே உள்ளன. அவற்றைப் பெறும் நிறுவனங்களும் பொதுவாக அரசுத் துறை சார்ந்தவையாகவே உள்ளன.

"நாட்டின் கடன் நிலவரம் மற்றும் அது யாருக்குக் கடன்பட்டிருக்கிறது என்பதை அறிவது அரசாங்கத்திற்கும், வரி செலுத்துவோருக்கும் மற்றும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையின் பகுப்பாய்வுக்கும் அவசியம்" என்று ட்ரெபேஷ் விளக்குகிறார்.

### உலகப் பொருளாதார அமைப்பில் சீனா

உலக நாடுகளுக்குக் கடன் வழங்கும் ஒரு சக்தியாக கடந்த 20 ஆண்டுகளில் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது சீனா. உலக நாடுகளுடன் தடையற்ற வர்த்தகம் என்ற தாராளமயமாக்கலை அப்போதே ஆதரிக்கத் தொடங்கியது.

அதனுடன், சீனாவின் பொருளாதாரமும் வேகமாக முன்னேறி வருகிறது. மேலும் சர்வதேச பொருளாதார சூழ்நிலையில் சீனாவின் முக்கியத்துவமும் அதிகரித்து வருகிறது.

ட்ரெபேஷ் கூறுகிறார், "சீனா உலகின் மிகப்பெரிய அரசாங்கக் கடன் வழங்கும் நாடாக மாறியுள்ளது. சீனா அளவுக்கு உலகில் எந்த அரசாங்கமும் கடன் கொடுக்கவில்லை."

2018 ஆம் ஆண்டின் தரவின் படி, சீனா உலகின் பிற நாடுகளுக்கு (வளர்ந்த நாடுகள் உட்பட) 5 டிரில்லியன் டொலருக்கும் அதிகமாகக் கடன் வழங்கியுள்ளது என்று இந்த் ஆய்வு தெரிவிக்கிறது.

இது உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதமாகும். 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்த கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1% மட்டுமே இருந்தது.

சீனா தனது வங்கிகளின் மூலமாக அரசின் கருவூலப் பத்திரங்களைக் கூட வாங்கும் பெரிய பொருளாதாரமான அமெரிக்க நிறுவனங்களுக்கும் கூட கடன் வழங்குகிறது. என்றாலும் குறைந்த வருமானம் ஈட்டும் சிறிய பொருளாதார நாடுகளில் அதன் ஆதிக்கம் அதிகம் உள்ளது.

இப்படியாக, ஏழை நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் சீனா வழங்கும் கடன் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) அல்லது வேறு எந்த அரசாங்கம் வழங்கும் கடனையும் விட அதிகம்.

### சீனாவுக்கு அதிகம் கடன்பட்டுள்ள 50 நாடுகள்

ஜிபூட்டி, டோங்கா, மாலைதீவு, கொங்கோ ஜனநாயக குடியரசு, கிர்கிஸ்தான், கம்போடியா, நிஜேர், லாவோஸ், ஜாம்பியா மற்றும் சமோவா ஆகியவை சீனாவிடம் கடன் பெறும் முதல் 10 நாடுகள் ஆகும்.

சீனாவிடம் கடன் பெறும் 50 கடனாளி நாடுகளின் சராசரி கடன் 2005 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாக இருந்து 2017 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

மற்றொரு கோணத்தில், இந்த நாடுகளின் வெளிநாட்டுக் கடன்களில் 40 சதவீதம் சீனாவிலிருந்து வந்தவை. இவற்றில், சீனாவின் மிகப்பெரிய கடனாளிகள், வெனிசுவெலா, ஈக்குவடார் மற்றும் பொலிவியா ஆகிய மூன்று லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆகும்.

"சர்வதேச நிதி அமைப்பின் மீது அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கம் குறித்து உலகம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை", என்று கூறும் ட்ரெபேஷ், "உலகின் பெரும்பகுதிக்கு சீனா ஒரு முக்கிய நாடாக மாறிவிட்டது என்பதை நாம் இப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்" என்று கூறுகிறார்.

"சீனா வழங்கும் கடன்கள் வளரும் நாடுகளில் மோசமான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும். அவற்றின் தாக்கம் காலப்போக்கில் அதிகரித்து வருகிறது. எனவே, இந்த திசையில் நாம் மேலும் ஆராய்ச்சி செய்ய வேண்டும்." என்றும் அவர் கூறுகிறார்.

- பிபிசி -



# பாரதம்



## கொரோனா தடுப்பூசி உருவாக்குவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது

### உலக சுகாதார அமைப்பு புகழாரம்

(டில்லி)

கொரோனா தடுப்பூசி உருவாக்குவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் அவசரகால சுகாதார திட்ட செயல் இயக்குநர் வைத்தியர் மைக்கேல் ரயான் ஜெனீவாவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "கொரோனாவுக்கு சக்திவாய்ந்த தடுப்பூசி உருவாக்குவதில் இந்தியா முன்னணி இடம் வகிக்கிறது.

அதுபோல், சக்திவாய்ந்த கொரோனா தடுப்பு மருந்துகளையும் தயாரித்து வருகிறது. எனவே, மொத்தத்தில் சர்வதேச அளவில் இந்தியா முக்கிய பங்காற்றி வருகிறது.

இந்தியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவது உண்மை தான். ஆனால் இந்தியா பெரிய நாடு. அங்கு 130 கோடி மக்கள் வசிக்கிறார்கள் என்ற கண்ணோட்டத்தில் அதை பார்க்க வேண்டும். அதுபோல கொரோனாப் பரிசோதனைகளையும் இந்தியா நன்கு செய்துள்ளது. ஏற்கனவே 2 கோடி மாதிரிகளை பரிசோதித்துள்ளது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 5 இலட்சம் மாதிரிகளை பரிசோதித்து வருகிறது.

கடந்த சில நாட்களாக பரிசோதனைகளை அதிகரித்து வருகிறது. கொரோனா பரிசோதனை மையங்கள் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## சிறிதாக்கப்பட்ட அணு... உருவாக்குகிறத...

### ஐ.நா.சந்...

(ஜெனீவா)

வட கொரியா தனது அணு ஆயுதத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வதாகவும், பாலிஸ்டிக் ஏவுகணைகளின் போர்க்கப்பல்களுக்கு பொருந்தும் வகையில் சிறிதாக்கப்பட்ட (miniaturised) அணு சாதனங்களை உருவாக்கியிருக்கலாம் எனவும் ஐ.நா. சந்தேகம் வெளியிட்டுள்ளது.

ஐ.நா. பொருளாதாரத் தடைகளை கண்காணிக்கும் சுயாதீன வல்லுநர்கள் குழுவின் அறிக்கை இந்த தகவலை தெரிவிக்கின்றது.

வட கொரியாவின் கடைசி ஆறு அணுசக்தி சோதனைகள், சிறிதாக்கப்பட்ட அணு சாதனங்களை உருவாக்க உதவியிருக்கலாம் எனவும் சில நாடுகள் நம்புகின்றன.

இந்த அறிக்கையினை, 15

## சைபர் தாக்குதலால் எதிரிநாடுகளை முடக்க சீனா திட்டம்

### பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

(டில்லி)

இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி தொடர்பான தகவல்களை சீன இராணுவத்தின் இரகசிய சைபர் உளவுப் பிரிவு உளவு பார்ப்பதாக பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை சீன இராணுவத்தின் இரகசியப் பிரிவு தீவிரப்படுத்தி உள்ளது.

கடந்த சில மாதங்களாக சீன இராணுவத்துடன் தொடர்புடைய ஹேக்கஸ் இந்தியா குறித்த முக்கிய தகவல்களை திரட்டுவதாகவும், இவ்வாறு உளவுப் பணிகளுக்காக 3 ஹேக்கஸ் உதவுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சைபர் தாக்குதல் வாயிலாக எதிரி நாடுகளின் வங்கிகள் உள்ளிட்டவற்றை முடக்கவும் சீன முயற்சி செய்து வருவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## ஆப்கான் சிறைச்சாலையில் ...

- 29 பேர் உயிரிழப்பு
- 50 இற்கு மேற்பட்டோர் ...
- 100 கைதிகள் தப்பியோ...

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு சிறைச்சாலையில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 29 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கும், அந்த நாட்டு இராணுவத்துக்கும் இடையே 19 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இந்த உள்நாட்டு போரில் ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்கா பக்கபலமாக இருந்து வருகிறது.

எனினும் முடிவில்லாமல் நீண்டு கொண்டே செல்லும் இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா தீவிர முனைப்பு காட்டி வருகிறது.

அதன் பலனாக கடந்த பெப்ரவரி மாத இறுதியில் அமெரிக்க அரசுக்கும், தலிபான் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே வரலாற்று சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. அதேபோல் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி தலைமையிலான அரசும், தலிபான்களுடன் அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நாட்டில் அமைதியை திரும்ப கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் ஒரு புறம் இருந்தாலும், அங்கு பயங்கரவாத தாக்குதல்கள் ஓய்ந்தபாடில்லை.

தலிபான் பயங்கரவாதிகள் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் குறிவைத்து தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில், ஐ.எஸ். பயங்கரவாதிகள் அப்பாவி மக்களை இலக்காக வைத்து கொடூர தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர்.

## ஜம்மு- காஷ்மீர் எல்லையில் இராணுவம் மீண்டும் அத்துமீறல்

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீரின் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

ஜம்மு-காஷ்மீரின் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் அவ்வப்போது இந்திய எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு இந்திய வீரர்களும் தக்க பதிலடி கொடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில், நேற்றுக் காலை பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டனர்.

ஜம்மு- காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணாகட் செக்டார் பகுதியில் பாகிஸ்தான் ராணுவத்தினர் இந்திய ராணுவ நிலைக்ள் மீது சிறிய மோட்டார் கையெறி குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினர் எனப் பாதுகாப்பு துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

## கனடாவில்

## 100 ஆண்டுகளில் இல்லாத வெப்பநிலை பதிவானது

(ஒட்டாவா)

கிட்டத்தட்ட 100 ஆண்டுகளில் இல்லாத அளவு, கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் கடந்த ஜுலை மாதத்தில் கடுமையான வெப்பநிலை பதிவாகியுள்ளது.

ஒட்டாவாவில் மாதத்தின் பாதிக்கும் மேலாக கடுமையான வெப்ப அலை தென்பட்டுள்ளது.

ஜுலை மாதம் நான்கு வெப்ப எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டன.

ஒட்டாவா விமான நிலையத்தில் சேகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் கனடாவின் வலைத்தளத்தின் தரவுகளின் அடிப்படையில், முந்தைய சராசரி உயர் வெப்பநிலை பதிவு 30.3 பாகை செல்சியஸ் ஆக இருந்தது.

இது 2012இல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## அரச பை... 18 பேர்...

(டமாஸ்கஸ்)

சிரியாவில் அரச ஆதரவு படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த மோதலில் 18 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது.

இந்தப் போரில் சிரிய அரசுக்கு ரஷ்யா ஆதரவு அளித்து வருகிறது. அதேபோல்

# வெளிநாடு



## அணு சாதனங்களை
## ...தா வடகொரியா
### ...சந்தேகம்


உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா.பாதுகாப்புக் குழு, வட கொரியா பொருளாதாரத் தடைக் குழுவிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையில், 'கொரியா ஜனநாயக மக்கள் குடியரசு தனது அணுசக்தி திட்டத்தை தொடர்கிறது. இதில் அதிக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் உற்பத்தி மற்றும் ஒரு சோதனை மென்னீர் அணு உலை கட்டுமானம் ஆகியவை அடங்கும். கொரியா ஜனநாயக மக்கள் குடியரசு தொடர்ந்து அணு ஆயுதங்களை தயாரிப்பதாக ஒரு உறுப்பினர் நாடு உணர்கின்றது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் வடகொரியா, அணு சோதனை நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)



## ...பில் பயங்கரவாதிகள் கொடூரத் தாக்குதல்
### ...டார் படுகாயம்
### ...யோட்டம்



இந்த நிலையில் ஆப்கானிஸ்தானின் நங்கார்ஹர் மாகாணத்தின் தலைநகர் ஜலாலாபாத்தில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான அசாத் துல்லா ஓராக்சாய் என்பவரை கடந்த சனிக்கிழமை அந்த நாட்டு இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர்.

இதற்கு பழிதீர்க்கும் விதமாக ஜலாலாபாத் நகரில் உள்ள மிகப் பெரிய சிறைச்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐ.எஸ். பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அன்றைய தினம் மாலை வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரை ஓட்டி வந்த தற்கொலைப் படை பயங்கரவாதி ஒருவர் அந்த காரை சிறைச்சாலையின் நுழைவாயில் மீது மோதி வெடிக்கச் செய்தார். பயங்கர சத்தத்துடன் வெடிகுண்டுகள் வெடித்து சிதறியதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது. கரும்புகை மண்டலம் உருவானது.

அதனைத் தொடர்ந்து கார்களில் வந்து இறங்கிய பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே சிறைச்சாலைக்குள் நுழைந்தனர். அங்கு அவர்கள் தங்கள் கண்ணில்பட்டவர்களை யெல்லாம் குருவியை சுடுவது போல சுட்டுத்தள்ளினர்.

இதையடுத்து சிறை காவலர்கள் தங்களது துப்பாக்கிகளால் அவர்களுக்குத் தக்க பதிலடி கொடுத்தனர். இரு தரப்புக்கும் இடையே ஞாயிற்றுக்கிழமை மாலை தொடங்கிய இந்த துப்பாக்கி சண்டை நேற்று முன் தினம் காலை வரை நீடித்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் இந்த கொடூர தாக்குதலில் சிறை காவலர்கள் மற்றும் கைதிகள் உட்பட 29 பேர் கொல்லப்பட்டனர். மேலும் சுமார் 50 பேர் படுகாயம் அடைந்தனர்.

மேலும் இந்தத் தாக்குதலை பயன்படுத்தி 100-க்கும் மேற்பட்ட கைதிகள் சிறையிலிருந்து தப்பி ஓடினர். அவர்களில் பெரும்பாலானோரை பாதுகாப்பு படையினர் மடக்கி பிடித்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

## அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் காலமானார்

(டுப்லின்)



அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரும், வடக்கு அயர்லாந்தின் பிரபல அரசியல்வாதியுமான ஜான் ஹியூம் **(John Hume)**, 83 வயதில் காலமானார்.

'வடக்கு அயர்லாந்து சமாதான முன்னெடுப்பின் சிற்பி என வர்ணிக்கப்படும் ஜான் ஹியூம், நீண்ட காலமாக நோயால் அவதிப்பட்டு வந்த நிலையில், உயிரிழந்தார்.

மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக வடக்கு அயர்லாந்தில் மிக உயர்ந்த அரசியல்வாதிகளில் ஒருவராகதிகழ்ந்த ஜான்ஹியூம், அங்கு வன்முறைகளின் போது அமைதியான, ஜனநாயக அரசியலுக்கான உறுதியான.அர்ப்பணிப்புக்காக பரவலாக பாராட்டப்பட்டார்.

1970இல் சமூக ஜனநாயக மற்றும் தொழிலாளர் கட்சியின் (எஸ்.டி.எல்.பி) ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்த அரசியல்வாதி ஜான் ஹியூம், 1979 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை கட்சியை வழிநடத்தினார்.

1998ஆம் ஆண்டு புனித வெள்ளி ஒப்பந்தத்திற்கு வழிவகுத்த சமாதான பேச்சுவார்த்தைகளில் ஹியூம் முக்கிய பங்கு வகித்தார். (2)

## ...படையினர்-கிளர்ச்சியாளர்கள் மோதல்
## ...ர் உயிரிழப்பு, 20 பேர் படுகாயம்

கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது.

இதற்கிடையில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் இட்லிப், அலெப்போ, ஹமா உள்ளிட்ட பகுதிகளை கைப்பற்றும் நோக்கில் சிரிய அரசு ஆதரவு படைகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. இதனால் அரசு ஆதரவு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் நிலவி வருகிறது.



இந்நிலையில், அந்நாட்டின் லடஹியா மாகாணத்தில் நேற்று முன்தினம் அரசு ஆதரவு படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை ஏற்பட்டது.

இந்த சண்டையில் அரசு ஆதரவு படையினர் 12 பேர், கிளர்ச்சியாளர்கள் 6 பேர் என மொத்தம் 18 பேர் உயிரிழந்தனர். மேலும், இரு தரப்பிலும் 20 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். (2)

# மத்தள விமானநிலையத்தை

## சுற்றுலாப்பயண மையமாக மாற்றத்தீர்மானம்

(கொழும்பு)

மத்தள ராஜபக்ஷ சர்வதேச 'விமான நிலையத்திற்கு வருகைதரும் விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், அதனை ஓர் சுற்றுலாப்பயண மையமாக மாற்றும் வகையில் விரிவான அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க விருப்பதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் ஊடாக சுமார் 50 சர்வதேச விமானங்கள் பயணித்ததாகவும், அதனூடாக சுமார் 2188 பயணிகள் பயனடைந்ததாகவும் அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இண்டிகோ



எயார்லைன்ஸ் விமான சேவையின் ஊடாக மத்தள விமான நிலையத்தைப் பயன்படுத்தி சுமார் 20 சர்வதேச விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதுடன், அதனூடாக சுமார் 358 பயணிகள் நாடுகளுக்கிடையில் ஏற்றிச்செல்லப்பட்டனர்.

அத்துடன் தற்போது கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் வெளிநாட்டவர்களை அழைத்துச்செல்லல் மற்றும் விமான ஊழியர்கள் தரித்து நிற்றல் என்பவற்றுக்காக மத்தள ராஜபக்ஷ சர்வதேசவிமானநிலையம் தொடர்ந்தும் பாவனையிலேயே இருக்கின்றது.

இந்நிலையிலேயே மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை ஒரு சுற்றுலாப்பயணமையமாக அபிவிருத்தி செய்ய விருப்பதாக விமான நிலையம்மற்றும்விமான சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் லெப்டினன் ஜெஹான் சுமன சேகர தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இந்த விமான நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் சர்வதேச விமானப் போக்குவரத்துக்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# இந்தியா- இலங்கை இடையே பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

**இந்தியா-இலங்கை இடையே பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.**

இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகரும் இந்தியக் கடற்படையின் தலைவருமான விகாஸ் சூட், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்னவை கடந்த ஜூலை 27 ஆம் திகதியும் இலங்கை கடற்படையின் துணைத் தலைவர் நிஷந்தா உல் கிடேனியை ஜூலை 29 ஆம் திகதியும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இரு நாட்டு பாதுகாப்புத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படும் வெளிநாட்டு இராணுவப் படை வீரர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் இலங்கை இராணுவத்தினர் என்றும் இது இந்தியா - இலங்கை இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுவாக உள்ளதைக் காட்டுகிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாவைத் தடுக்க மருத்துவ உதவிகளை இந்தியா கடந்த சில மாதங்களாக வழங்கி வருகிறது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் இலங்கையில் நடைபெற்ற சீன தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர்கள் சங்க தொடக்க விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன, இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களின் சோதனை காலங்களில் சீனா உதவியதாக தெரிவித்திருந்தமை தொடர்பாக இலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தமை குறித்தும் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# இலங்கையர்களை அழைத்து வரும் நடவடிக்கை இடைநிறுத்தம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலை முன்னிட்டு வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் மீண்டும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பொதுத் தேர்தல் கடமைகளில் பாதுகாப்பு பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் ஆகியோர் ஈடுபடவுள்ளமையால் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கை எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும்.

இதன்போது டுபாயிலுள்ள 660 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலைதீவு, அவுஸ்ரேலியா, கட்டார், ஓமான், பஹ்ரைன், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களையும் நாட்டுக்கு அழைத்துவர தீர்மானிக்கப்பட்டுள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கருவியை விழுங்கலாம்!

ஒரு டாக்டரிடம் போகிறீர்கள். வயிறு வலிக்கின்றது என்று சொல்கின்றீர்கள். அவர் உங்களை சோதித்துப் பார்க்கின்றார். பார்த்துவிட்டு... ஏதாவது ஒரு மாத்திரையைக் கொடுத்து விழுங்கு என்று சொன்னால் விழுங்கி விடுவீர்கள்.

மாத்திரைக்குப் பதிலாக டாக்டர்.. ஒரு தையல் மிஷினைக் கொடுத்து அதை விழுங்கு என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?

நீங்கள் முழிப்பீர்கள்... அல்லது டாக்டரையே சந்தேகமாகப் பார்ப்பீர்கள்.

ஆனால் வருங்காலத்திலே நோயாளி தையல் மிஷினை விழுங்குவதற்கு மிகவும் சர்வ சாதாரணமாக போய்விடும் போல் இருக்கு.என்ன இது... இப்ப நீங்கள் எல்லாம் என்னையே சந்தேகமாக பார்ப்பது மாதிரி தெரிகிறது.

சந்தேகப்படாதீர்கள்.நான் சொல்லும் தையல் மிஷின் மிகவும் பெரிதாக இருக்காது சின்னதாக இருக்கும். விழுங்கக்கூடிய அளவிலே தான் இருக்கும். இது துணியைத் தைக்காது... வயிற்றுக்குள்ளே போய் தையல் போடும்.

நுண்ணிய தையல் எந்திரம்-அப்படி என்று இதை சொல்லலாம். ஒரு நோயாளிக்கு வயிற்றிலே தையல் போட வேண்டியிருக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள்..அவரிடம் இந்த சிறிய கருவியைக் கொடுத்து விழுங்கச் சொல்லுவார்கள். அவர் அதை கரெக்டா செஞ்சிடுவார். கருவி உள்ளே போகும். டாக்டர் வெளியிலே இருந்து கொண்டே அதற்கு உத்தரவு கொடுத்துக் கொண்டிருப்பார்.

வயிற்றுக்குள்ளே எந்த இடத்திலே தையல் போட வேண்டுமோ அந்த இடத்திலே கரெக்டா அந்தக் கருவி தையல் போட்டுவிடும். நைலோன் நூலாலேயே தையல் போடும்.

பிரிட்டிஷ் டாக்டர்கள் இந்த கருவியை உருவாக்கியிருக்கின்றார்கள்.

இந்தக் கருவியுடைய நீளம் 5 செ.மீற்றர். குறுக்களவு சுமாராக 11 மில்லி மீற்றர். அவ்வளவு தான். கடுமையான வயிற்றுப் புண்... அல்சர் இது மாதிரி விடயத்துக்கெல்லாம் வயிற்றுக்குள்ளே தையல் போட வேண்டிய அவசியம் வருகின்ற பொழுது... இது மிகவும் உபயோகமாக இருக்கும்.

அறுவை சிகிச்சையே தேவையில்லாமல் போயிடுதே... அது ஒரு பெரிய வசதி இல்லையா?

வயதானவர்களுக்கு வயிற்றுப் புண் வந்து... அறுவை சிகிச்சை செய்தால்.. அது குணமாக அதிக நாளாகும்.அவர்களுக்கெல்லாம் இந்தக் கருவி மிகவும் உபயோகம்.

இந்தத் தையல் கருவியின் நுனியிலே ஒரு அகநோக்குக் கருவி இருக்கும். Endoscope கண்ணாடி இழையாலே ஆன மெல்லிய குழாய் இது. இதோடு வெளி முனையிலேயிருந்து பார்த்தால் வயிற்றுக்குள்ளே உள்ள நிலைமை என்ன... எப்படி என்பது தெரிந்துவிடும்.

டாக்டர் இது மூலமாக பார்த்து விடயத்தைத் தெரிந்து கொள்வார். அதற்குப் பின்பு வயிற்றுக்குள்ளே இருக்கின்ற கருவிக்கு ஆணையிடுவார். உடனே அந்த தையல் கருவி தானாக வேலை செய்ய ஆரம்பிக்கும். வயிற்றுப்புண் உள்ள இடத்தில் இரண்டு பக்கத்திலேயிருந்தும் திசுக்களை உள்ளே இழுத்து, நைலோன் நூலைக் கொண்டு தையல் போட்டுவிடும்.

இதே அடிப்படையிலே இன்னொரு கருவியை தயாரிக்கிறதுக்கும் ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கலாம்.

ஸ்டேப்ளர்- இருக்கின்றதல்லவா... பேப்பர் அல்லது புத்தகங்களை சேர்த்து பின் போடுவதற்கு உபயோகப்படுத்துகிறோமே.. அது மாதிரி ஒரு கருவி.

வயிற்றுக்குள்ளேயே ஒரு சின்ன மருந்துக் குப்பியை கொண்டு போய் தேவையான இடத்திலே வைத்து தைத்து விடுகிறது அதாவது Stapler pin போடுவது மாதிரி போட்டு விட்டுவிடுகிறது.

அதற்கு அங்கேயே இருந்து கொண்டு கொஞ்சம் கொஞ்சம் மருந்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்.

பல வியாதிகளுக்கு இது உபயோகப்படும்.

ஆகக் கூடிய இப்பொழுதெல்லாம் மாத்திரை விழுங்குகிறது மாதிரி வருங்காலத்திலே சின்ன சின்ன கருவிகளையெல்லாம் விழுங்குவதற்கு நோயாளிகள் தயாராக இருக்க வேண்டும்.அதற்கு பயிற்சி எடுத்துக் கொள்வது மாதிரி... இப்பொழுதெல்லாம் சில பேர் தவறுதலாக சிலதை விழுங்கிக் கொள்வது உண்டு.

ஒரு பையன் ,இப்படித்தான் ஒரு நாள், அவர்கள் குடும்ப டாக்டருக்குப் போன் செய்தான் மிகவும் அவசரமாக.

டாக்டர்-நீங்கள் உடனே புறப்பட்டு எங்கள் வீட்டுக்கு வாருங்கள். மிகவும் அவசரம் எங்கள் வீட்டு சாப்பாட்டு மேசையில் நான் வைத்திருந்த சின்ன பென்சிலை எங்கள் அப்பா தவறுதலாக .. எடுத்து விழுங்கி விட்டார் டாக்டர்.. உடனே வாங்க என்றான்.

டாக்டர் உடனே அதற்கான உபகரணங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அதற்குள்ளேயே மறுபடியும் போன்கோல்.

அதே பையன் தான் பேசினான். " டாக்டர் நீங்கள் வரவேண்டியதில்லை. பிரச்சினை தீர்ந்து விட்டது " என்றான்.

எப்படி என்று கேட்டார் டாக்டர்.

" நான் எழுதுவதற்கு வேறு ஒரு பென்சில் கிடைத்து விட்டது." அப்படி என்றான் பையன்

# தேர்தல் பிரசாரம் தொடர்பில் இம்முறை முற்றிலும் மாறுபட்ட நிகழ்வு

(கொழும்பு)

கடந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இம்முறை பொதுத் தேர்தலுக்கான பிரசாரக் காலத்தில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொலிஸாருக்கோ, தேர்தல் ஆணைக் குழுவிற்கோ, அரச அதிகாரிகளுக்கோ அழுத்தங்களை கொடுக்கவில்லை என தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இம்முறை பொதுத் தேர்தலுக்கான பிரசாரக் காலத்தில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொலிஸாருக்கோ, தேர்தல் ஆணைக்குழுவிற்கோ, அரச அதிகாரிகளுக்கோ அழுத்தங்களை கொடுக்கவில்லை.

இந்த நிலைமையானது 5 ஆண்டுகளுக்கு பின்னர் காணப்பட்ட நிலைமையை விட்ட முற்றிலும் மாறுபட்டது. கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் போது இவர்கள் மூவர் மாத்திரமல்ல, உயர் மட்ட அரசியல்வாதிகளும் அதிகாரிகளுக்கு அழுத்தங்களை கொடுத்தனர்.

தெற்காசிய நாடு என்ற வகையில் அதிகாரிகளுக்கு அழுத்தங்கள் இல்லாது அதிகாரிகள் தேர்தலை முன்னெடுத்துச் செல்ல இடமளிக்கப்பட்டமை வெற்றியானது.

இதனடிப்படையில் வாக்காளர்கள் தமது விருப்பத்தை தெரிவு செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அத்துடன் கடந்த தேர்தல் காலங்களுடன் ஒப்பிடும் போது இம்முறை தேர்தல் வன்முறைகள் குறைவாக காணப்பட்டது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# அங்கொட லொக்காவின் வழக்கு தமிழக சிபி - சிஐடி க்கு மாற்றம்

(சென்னை)

நாட்டில் பிரபல போதைப் பொருள் கடத்தல் குழுவின் முக்கியஸ்தரான அங்கொட லொக்காவின் உயிரிழப்பு தொடர்பான விசாரணைகளை தமிழக பொலிஸ் குற்றப் பிரிவு (சிபி-சிஐடி) நேற்று முன்தினம் ஏற்றுக் கொண்டுள்ளது.

மதுமா சந்தன லசந்த பெரேரா என்ற அங்கொட லொக்கா (வயது-35) சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரராக தேடப்பட்டு வந்தவர்.

இவர் மீது கொலை, கடத்தல் குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

கடந்த சில வருடங்களாக தலைமறைவாகியிருந்த இவர், இந்தியாவில் அண்மையில் உயிரிழந்ததாகவும் இவரது உடல் மதுரையில் தகனம் செய்யப்பட்டதாகவும் இந்திய பொலிஸார் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இந் நிலையில் இறந்ததாக கூறப்படும் அங்கொட லொக்காவின் ஆவணங்களை பிரதீப் சிங் என்ற பெயரில் சமர்ப்பித்த சிவகாமி சுந்தரி, அமானி தான்ஜி, தியானேஸ்வரன் ஆகிய 3 பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தக் கொலை வழக்கு இது இரு நாடுகள் சம்பந்தப்பட்ட வழக்கு என்பதால் மாநகர் பொலிஸாரிடமிருந்து சிபி சிஐடி-க்கு மாற்றப்பட்டுள்ளது. (ஜ-4)

# நாசா வெளியிட்டுள்ள அரிய புகைப்படம்





(கொழும்பு)

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து கடந்த மாதம் 24 ஆம் திகதி எடுக்கப்பட்ட புகைப்படமொன்றில் இலங்கையும், இந்தியாவின் பிரகாசமான ஒளிரும் தெற்கு முனையும் அழகாக தென்படும் காட்சியொன்றை நாசா வெளியிட்டுள்ளது.

நாசா விண்வெளி வீரர்களான பொப் பெஹன்கென் மற்றும் டக் ஹர்லி ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இரண்டு மாதங்கள் கழித்த பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர்கள் பூமியை வந்தடைந்தனர்.

ஆனால் நாசா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் என்ற விண்வெளி ஆய்வு தொழில்நுட்பங்கள் நிறுவனம், ஏற்கனவே மற்றொரு குழுவினரை அடுத்த மாதம் சுற்றுப்பாதையில் செலுத்த திட்டமிட்டுள்ளன.

முதன்முதலில் மனிதர்களால் இயக்கப்பட்ட விண்வெளி ஆய்வு தொழில்நுட்பங்கள் நிறுவனத்தின் பயணத்தின் போது பெஹன்கென் மற்றும் டக் ஹர்லி ஆகியோரால் எடுக்கப்பட்ட சிறந்த புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படமொன்றில் இலங்கையும், இந்தியாவின் பிரகாசமான ஒளிரும் தெற்கு முனையும் காட்டப்பட்டுள்ளன.

விண்மீன்கள் நிறைந்த வானமும் வளிமண்டல பளபளப்பும் பூமியின் அடிவானத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. (ஜ-4)




## கந்தன் என்று சொன்னால் கவலைகள் தீரும்

ஆறுமுகம் என்றாலே அருள்வந்து சேரும்
கந்தன் என்று சொன்னால் கவலைகள் தீரும்
கடம்பன் என்று சொல்ல கருணைகிட்டும்
மாம்பழத்தின் சுவை அறிய மையல்
கொண்ட முருகா நாம்
தேர்தனிலே வெற்றி பெற்று தமிழ்நாட்டின்
சுவை அறிந்து கல்விவளம்
கல்விக்கான தொழில்வளம், உளவளம்
சகலவளங்களும் பெற்று வாழ வழிதந்திடுவாய்
வண்ண மயிலேறிடும் வடிவேலா

வ. தெய்வநாயகி
திருநெல்வேலி

## நல்லை மயிலேறி வரு நாதா

மாமயிலேறிடும் வேல் முருகா - உனைப்
பாடுகிறோம் அருள் நீ அனுதினமும் - நல்லை
வருத்தமுற்ற தொற்றும் மனத்துயரமனைத்தும்
அல்லலறுத்து இன்பம் அருள் புரிவான் நல்லை
சொல்லும் பொருளும் மனச் சிந்தனையும்
தூய்மை பெறும் தினம் நினைந்தொழுதால்
அல்லும் பகலுமுனை நினைந்தமுதால் இன்பம்
சூழ்ந்து வளங்கொழிக்கும் நம் நாடே நல்லை

தேஜஸ்வராலயா சுபாஷினி

## அலங்காரத்தால் அறியப்படுபவனே சரணம்

இரவு பகலும் எமைக்காக்கும்
ஈசன் மைந்தா சரணமப்பா
குறைகள் குற்றம் களைந்திடுவாய்
குமரா உன்தாள் சரணமப்பா
மலைகள் மீது குடியிருந்தாய்
மனங்கள் உள்ளும் கோவில் கொண்டாய்
சிலைக்கு உள்ளும் நீயொளிர்ந்தாய்
சொல்லுக் குள்ளும் நீயொலித்தாய்

விஜயகண்ணன்
யாழ்ப்பாணம்.

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

எண்ணிய யாம் எண்ணியதாம்
எய்தச் செய்யும் இயல்பினன்
திண்ணியரின் கண்ணியத்தில்
சேர்ந்து மேவும் இறையவன்
மண்ணும் விண்மற் றண்டம் யாவும்
மறைந்து நிறையும் மறையவன்
நண்ணினார்க்கு ஞான கானம்
நவிலும் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

35

கலாநிதி முருகர் குணசிங்கம்

மேலும் தமிழ் ஆராய்ச்சி, மகா நாடுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், தமிழ் நாடகங்கள் என்பன மேற்படி நாடுகளில் குறிப்பாக அவுஸ்திரேலியாவில் இடம்பெறாத மாதங்களே இல்லையென்று சொல்லும் அளவுக்கு நிகழ்ந்து வருகின்றன.

அதேபோன்று வார இறுதி நாட்களில் பரத நாட்டியம், புல்லாங்குழல், வீணை வகுப்புகள் துறை சார்ந்த வல்லுநர்களால் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் தமிழர்களின் பண்பாடும் கலையும் இளம் தலைமுறையினரிடம் இயன்றளவு தொடர்ந்து கையளிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றைவிட பல தமிழ் சமூக நலன் சார்ந்த நிறுவனங்கள், அரசியல் அமைப்புகள் போன்றவையும் தொடர்ச்சியாகத் தமது பணிகளை மேற்படி நாடுகளில் வாழும் தமிழர் பொருட்டும் தமது சொந்த நாடுகளில் உள்ள தமிழர்களின் விடிவு பொருட்டும் தொடர்ந்து தளராது செயலாற்றிக் கொண்டு இருக்கின்றன.

அரசியல் அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள், இலங்கைத் தமிழர்களின் அவலநிலை குறித்தும் அவர்களின் அரசியல் நிலை குறித்தும் இலங்கை அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகள் குறித்தும் தமது எதிர்ப்புப் போராட்டங்களைப் பல்வேறு வழிவகைகளில் தொடர்ச்சியாக நடத்தி அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அரசுகளுக்கும் இலங்கை அரசுக்கும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றார்கள்.

அத்துடன் தாம் வாழும் நாடுகளின் உள்நாட்டு அரசியலிலும் தங்களது கவனத்தைச் செலுத்தி உள்நாட்டு அரசியல்வாதிகளுடன் இணைந்து பாடுபட்டு அவர்களுக்குத் தமது ஆதரவையும் நல்கி வருகின்றார்கள்.

இதன் விளைவாக ஈழத்தமிழர்கள் நாட்டுப்பற்று உடையவர்கள், ஒற்றுமை நிறைந்தவர்கள் தாம் வாழும் நாட்டிலும் அக்கறை உடையவர்கள் என்ற நற்பெயரை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மக்களிடமும் அரசிடமும் பெற்றிருக்கின்றார்கள்.

அத்துடன் ஈழத்தமிழர்கள் அமைதியானவர்கள், கடுமையான உழைப்பாளிகள் என்றும் பெயர் வாங்கிய ஒரு சமூகமாக வாழ்வது பெருமைக்குரிய விடயம் ஆகும்.

அதேவேளையில் சில மாறுபட்ட அல்லது முரண்பாடான நிலைகளைச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டிய தேவையும் ஏற்படுகிறது.

தம்மை மேல் மட்டத்தினர் என்றும் தாம் தொழில் அடிப்படையில் மேற்படி நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வந்தவர்கள் என்றும் கூறிக்கொண்டு தமிழ்ச் சமூகத்தில் இருந்து பிரிந்து தனியாகத் தம் குடும்பத்தினருடனும் தம் நெருங்கிய உறவினர்களோடும் வாழும் ஒரு பிரிவினர் மொழி, பண்பாடு, தாய்நாடு, அந்த நாட்டில் உள்ள மக்கள் பற்றிய உணர்வோ சிந்தனையோ இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள் என்பதையும் பார்க்க முடிகின்றது.

அவர்கள் தமிழ் மக்களால் நடத்தப்படும் நிகழ்வுகளிலும் மற்றும் ஒன்றுகூடல்களிலும் கலந்து கொள்வதும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. தம்மை மத்திய தர வர்க்கத்தினர் என்று கூறிக் கொள்பவர்கள் சிலரும் அவ்வாறான போக்குக் கொண்டவர்களாவே காணப்படுகின்றனர்.

தமது வீட்டிலோ அல்லது வெளியிலோ குறைந்தபட்சம் தம் பிள்ளைகளுடன்கூடத் தமிழில் பேசுவது இல்லை. தமிழ்மொழியைப் போதிப்பதும் இல்லை.

ஆனால் பிள்ளைகளின் தொழில் சார்ந்த கல்விக்குப் பல்லாயிரக்கணக்கில் செலவு செய்வார்கள். இலவசமாகப் போதிக்கப்படும் தமிழ்ப்பள்ளி வகுப்புகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்புவதில்லை.

அவர்களுடைய தொடர்புகள் அனைத்தும் ஆங்கிலமொழியிலேயே இடம் பெறும். அவ்வாறான போக்கும் நடைமுறையும் அவர்களது குடியேற்ற நாட்டு மனோநிலை **(Colonial Mentality)** அல்லது அடிமைத்தனம்தான் **(Slave)** என்பதனை அவர்களால் சிந்திக்க முடிவது இல்லை.

ஆனால் கோயில்களுக்குத் தவறாது சென்று வழிபடுவதுடன் பெருந்தொகைப் பணத்தைக் காணிக்கையாகவும் கொடுத்து வருகின்றார்கள்.

இத்தகைய மேல்தட்டு வர்க்கத்தினர் வெள்ளை இனத்தவர் பார்வையில் தம்மையும் ஈழத்தில் இருந்து வந்த ஏதிலிகள் அல்லது அகதிகள் என்றே பார்ப்பார்கள் என்பதை உணரமாட்டார்கள்.

அத்தகைய ஈழத்தமிழர்களும் ஏனைய ஈழத்தமிழர்களுடன் இணைந்து செயற்படுவார்களேயானால் ஈழத் தமிழ் சமூகம் மேலும் வலுவுடனும் ஒற்றுமையோடும் தனித்துவமான இனமாகத் திகழும்.



மேற்படி பிரிவினர் தமது பிள்ளைகளைப் பரதநாட்டிய வகுப்புகளுக்கும் வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் வகுப்புகளுக்கும் அனுப்பி அதிகம் செலவு செய்து பயிற்றுவிக்கின்றார்கள்.

தமது பெண் பிள்ளைகளை சமூகத்தில் அதிகமாக மதிக்கப்படும் அல்லது அதிகம் வேதனம் பெறும் மருத்துவர்களுக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்கு பரத நாட்டியப் பயிற்சி முக்கியமான எதிர்பார்ப்பாக தமிழ்ச் சமூகத்தில் இருந்து வருகின்றது.

எனவே தமது பிள்ளைக்கு பரத நாட்டியம் கற்பதற்கு உரிய அடிப்படைத் திறமைகள் இருக்கின்றனவா, இல்லையா? அப்பிள்ளைகள் பரத நாட்டியம் கற்க விரும்புகின்றார்களா, இல்லையா? என்று கூடப் பார்ப்பது இல்லை.

இதற்கு அடிப்படையான காரணம் தகுதியான திருமணத் தெரிவும் போலிக் கௌரவமும் ஆகும் **(False Prestige)** என்று நேர்காணலின் போது கூறப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் சாதிக் கொடுமை, சீதனக் கொடுமை, வர்க்க வேறுபாடுகளுக்கு எதிராக இறுக்கமான சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவைகளைப் பெருமளவு ஒழித்துக் கட்டி இருந்தார்கள்.

ஆனால் அவை அனைத்தும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் மத்தியில் புரையோடிப் போய் சாகாவரம் பெற்ற ஒன்றாக இருந்து வருவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

வெள்ளை இனத்தவரின் பல்வேறு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் இனம் அவர்களின் வாழ்வியல் நடைமுறையில் சற்றேனும் இல்லாத சாதி, சீதனம், வர்க்கம் போன்ற சமூகச் சீர்கேடான, பிற்போக்கான கொள்கைகளைத் தம்முடன் பின்பற்றி வாழ்வது ஒரு நல்ல சமுதாயத்திற்குரிய வாழ்வியல் கொள்கையாக ஒருபோதும் அமையப் போவதில்லை.

இன்றைய ஈழத்தமிழ் சமுதாயம் சமூக நீதியற்ற மேற்படி முறைமைகளை இறுகப் பற்றிக் கொண்டு வாழ்ந்தாலும் எதிர்கால இளம் தலைமுறையினர் சாதி முறைக்கும் சீதனக் கொடுமைகளுக்கும் வர்க்க வேறுபாடுகளுக்கும் சாவு மணி அடிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

மேற்கு நாடுகளில் வாழும் இளம் தலைமுறையினர் பக்கம் பார்வையைச் செலுத்துவதும் மிகவும் முக்கியமானது. ஈழத் தமிழர்களின் பிள்ளைகள் சிறு வயதில் அந்நாடுகளுக்கு வந்தவர்கள்.

பலர் அந்நாடுகளிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். அவர்களுள் கணிசமானவர்கள் தமது சமய, மொழி, பண்பாடு, தமது தாய், தந்தையரின் தாய்நாடு, அங்குள்ள மக்கள், அவர்களின் அரசியல் நிலைமைகள் பற்றி மிகவும் அலட்சியமாகவே இருந்து வருகின்றார்கள் என்பது கசப்பான உண்மை ஆகும்.

அவர்கள் பெரும்பாலும் தமது கல்வியில் மிகவும் அக்கறை செலுத்தி தொழில் வாய்ப்புகளைப் பெற்றவர்களாகவே வாழ்கின்றார்கள். கணிசமான எண்ணிக்கையினர் மேலைத்தேச வாழ்க்கையோடு சங்கமமாகி இருப்பதையும் பரவலாகப் பார்க்க முடிகிறது.

குடிப்பழக்கம், போதைப் பொருளுக்கு அடிமையாதல், சூதாட்டம் போன்ற கேளிக்கைகளில் ஈடுபாடு கொண்டு பெற்றோர் மீது கூட அக்கறை காட்டாமல் இருந்து வருகிறார்கள்.

இவர்களைத் தவிர மற்றொரு கணிசமான இளம் தலைமுறையினர் தமது மதம், மொழி, கலை, பண்பாடு, அரசியல், குடும்ப பொறுப்பு போன்றவற்றில் ஈடுபடுவதுடன் தமது தாய், தந்தையருடைய நாட்டுக்குச் சென்று தம் இனத்தவர்களுக்குத் தேவையானவற்றைத் தம்மால் இயன்றளவு செய்து வருவது, தமிழ் சமூகத்திற்குப் பெரும் ஆறு தலையும் நம்பிக்கையையும் கொடுக்கின்றது.

இத்தகைய இளம் தலைமுறையினர் சீதனம், சாதி, வர்க்கம் போன்ற சமுதாயத் தீங்குகளை அடியோடு வெறுப்பவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து மேற்கண்ட நாடுகளில் அகதிகளாக வாழும் தமிழர்கள் தலைமுறையுடன் மேற்படி சமுதாயக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்கிற நம்பிக்கையைத் தோற்றுவிக்கின்ற வகையில் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கின்றார்கள்.

தவறான வழிகளில் செல்வோரும் தமது தவறுகளை உணர்ந்து திருந்தி நல்லுணர்வுகளோடு நல்வழிகளில் செல்லும் ஆயிரமாயிரம் இளம் தலைமுறையினரோடு கைகோர்த்து ஒற்றுமையுடன் செயற்படுவார்களேயானால் மேற்கண்ட நாடுகளில் ஒரு நல்ல புதிய, ஒன்றுபட்ட, பலம்வாய்ந்த தமிழ்ச் சமுதாயம் மலர்வதையும் எழுச்சி அடைவதையும் எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

(தொடரும்)

# அனைத்து தபால் அலுவலகங்களின் சேவைநேரம் நீடிப்பு




(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து தபால் அலுவலகங்களும் நேற்று திறக்கப்பட்டிருந்த நிலையில் இன்றும் மேலதிகமாக சில மணித்தியாலங்கள் திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைகளுக்காக வருகை தரும் அதிகாரிகளுக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் பொருட்டே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகர்களால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான மற்றும் உப தபால் அலுவலகங்கள் இன்று இரவு, 8 மணி வரை திறந்திருக்கும் என தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சந்தேகத்திற்கிடமான சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பில் விசாரணை



(கொழும்பு)

சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் சிறைச்சாலை அதிகாரிகள் குறித்து புலனாய்வு பிரிவினரூடாக தகவல்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான அதிகாரிகள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனரா என்பது தொடர்பில் கடுமையாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷாரா உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டால், அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அரச புலனாய்வு பிரிவினரும் சிறைச்சாலைகள் புலனாய்வு பிரிவினரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளையும் மையப்படுத்தி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷாரா உபுல்தெனிய மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கடலில் நோய்வாய்ப்பட்ட மீனவர்

## கடற்படை நடவடிக்கை

(கொழும்பு)

கடலில் நோய்வாய்ப்பட்ட மீனவர் ஒருவரை மீட்டு மருத்துவ சிகிச்சைக்காக இலங்கை கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 29 ஆம் திகதி காலி மீன்வளத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட 'யசிரு புத்தா' என்ற பல நாள் மீன்பிடிக் கப்பலில் இருந்த ஒரு மீனவர் மாரடைப்பால் நோய்வாய்ப்பட்டுள்ளதாக கடற்படை தலைமையகத்தில் உள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு மீன்பிடி மற்றும் நீர்வள திணைக்களத்தினால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய உடனடியாக இலங்கைக் கடற்படையின் தெற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான துரித தாக்குதல் படகு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

நோயாளியை படகில் இருந்து மீட்டெடுத்த பின் கடற்படை மருத்துவ குழுவினரால் நோயாளிக்கு முதலுதவிகள் அளிக்கப்பட்டு, கடற்படை படகின் மூலம் காலி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் அவர் மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஜ-4)

# விக்டோரியாவில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறுவோருக்கு 5 ஆயிரம் டொலர்கள் அபராதம்

(விக்டோரியா)

அவுஸ்தரேலியாவின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமான விக்டோரியாவில், கொவிட்-19 தனிமைப்படுத்தல் விதிகளை மீறி தங்கள் வீட்டிற்கு வெளியே பிடிபட்ட எவருக்கும் கிட்டத்தட்ட 5,000 அவுஸ்திரேலிய டொலர்கள் அபராதம் விதிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விக்டோரியாவில் இந்த வார தொடக்கத்தில் கொவிட்-19 தொற்று பரவல் அதிகரித்ததைத் தொடர்ந்து அங்கு, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், மக்கள் நடமாட்டத்திற்கு கட்டுப்பாடுகளை கடுமையாக்கியது மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தின் பெரும் பகுதிகளை கட்டம் கட்டமாக மூட உத்தரவிட்டது.

ஆனால், கொவிட்-19 முடக்க நிலையின் கீழுள்ள கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினர் அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்ட போது வீட்டில் இல்லை எனவும், சமூக இடமாற்றத்தை நிறுத்த கடுமையான புதிய அபராதங்கள் தேவை என்றும் மாநில முதல்வர் டேனியல் ஆண்ட்ரூஸ் கூறினார். இதற்கமைய புதிய அபார விதி நடைமுறைக்கு வந்துள்ளது. விக்டோரியா மாநிலத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை குறைந்தது 439பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# அரசியல் கட்சிகளுக்கு பிரசாரம்; தேர்தல் அதிகாரிகள் நீக்கம்



(நுவரெலியா)

அரசியல் கட்சிகள் சார்பில் பிரசாரத்தில் ஈடுபட்ட பத்து தேர்தல் அதிகாரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த தகவலை நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ரோஹன புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் சார்பில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டதை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நீக்கப்பட்ட அதிகாரிகளுக்கு பதிலாக நியமனம் செய்வதற்கு போதுமான அதிகாரிகள் தம்மிடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட குறித்த 10 சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# உலகை அச்சுறுத்தும் கொரோனா உயிரிழப்பு 7 இலட்சத்தை எட்டியது

(கொழும்பு)

உலகளவில் கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 இலட் சத்தை அண்மித்துள்ளது. அதற்கமைய இந்த வைரஸினால் இதுவரையில் 6 இலட்சத்து 97 ஆயிரத்து 189 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

உலக மக்களை பீதியடையச் செய்துள்ள கொடிய கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த வைரஸ் காரணமாக இதுவரையில், ஒரு கோடியே 84 இலட்சத்து 43 ஆயிரத்து 484 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரையில் இந்த வைரஸ் தொற்றிலிருந்து ஒரு கோடியே 16 இலட்சத்து 72 ஆயிரத்து 917 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

அதேநேரம் இந்த நோய்த் தொற்றுக்குள்ளான 60 இலட்சத்து 73 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் 64 ஆயிரத்து 677 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்த வைரஸினால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் முறையே அமெரிக்கா, பிரேஸில், இந்தியா ஆகியன உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய அதிகாரிகளின் சொத்துக்கள் அரசுடைமை

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் அதிகாரிகளுடைய சொத்துக்களை அரசுடைமையாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரிகள் முறையற்ற வகையில் திரட்டிய பணத்தால் சேகரித்த சொத்துக்களையே அரசுடைமையாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிதி தூய்தாக்கல் சட்டத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான தகவல்கள் தற்போது திரட்டப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் களஞ்சிய அறையிலிருந்து பெறப்பட்ட போதைப்பொருள் தொடர்பான அறிக்கையை பொதுத் தேர்தலின் பின்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

# லடாக் மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தி

(டில்லி)

இந்திய அரசாங்கத்தினால் லடாக் மற்றும் ஜம்மு - காஷ்மீர் என்பன யூனியன் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்ட பின்னர் அங்கு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களைப் பட்டியற்படுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் இந்திய உயர்ஸ்தானிகராலயம், உண்மையில் அப்பகுதி மக்கள் பல்வேறு நன்மைகளை அடைந்திருப்பதாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் நெஹாசிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய அரசாங்கத்தினால் லடாக் மற்றும் ஜம்மு - காஷ்மீர் பகுதிகளை யூனியன் பிரதேசங்களாக அறிவிக்கும் அரசியலமைப்பின் 370 ஆவது சரத்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியடைகின்றது.

அதனை முன்னிட்டு கடந்த ஒரு வருடகாலத்தில் ஜம்மு - காஷ்மீர் அடைந்திருக்கக்கூடிய நன்மைகள், அங்கு இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகள் மற்றும் அப்பிரதேச மக்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய உதவிகளைச் சுட்டிக்காட்டி இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத் தின் பேச்சாளர் நேஹாசிங் நீண்ட ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

இந்திய நாட்டின் 1.3 பில்லியன் மக்களின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் அவர்களது பிரதிநிதிகள் உள்ளடங்கியிருக்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைப் பெற்றுக்கொண்டதன் ஊடாக லடாக் மற்றும் ஜம்மு - காஷ்மீர் பகுதிகள் ஒரு யூனியன் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டதன் பின்னரான மாபெரும் பயணத்தின் ஓராண்டுகாலம் நிறைவுற்றுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இந்தியப் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி லடாக் மற்றும் ஜம்மு - காஷ்மீர் என்பன யூனியன் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டதுடன், அவற்றின் நிர்வாக நடவடிக்கைகள் நேரடியாக இந்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இப்பகுதியில் அரசாங்கத்தினால்



பெருமளவான அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பௌத்த கல்வியுடனான முதலாவது மத்திய பல்கலைக்கழகத்தை லடாக்கில் அமைப்பதற்கான திட்டம், அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள், காஷ்மீரில் அப்பிள் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கான விசேட நிவாரணத்திட்டம், மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் திட்டம், பின்தங்கிய கிராமங்களில் காணப்படும் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக முன்னெடுக்கப்பட்ட "மீண்டும் கிராமத்திற்கு" செயற்றிட்டம் உள்ளிட்ட மேலும் பல்வேறு செயற்றிட்டங்களைக் குறிப்பிட முடியும் என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-2)

### ஊழல் குற்றச்சாட்டு எதிரொலி

# நாட்டை விட்டு வெளியேற முன்னாள் ஸ்பெயின் மன்னர் முடிவு

(மட்ரிட்)

தன் மீதான தொடர்ச்சியான ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக, நாட்டை விட்டு வெளியேற முன்னாள் ஸ்பெயின் மன்னர் ஜுவான் கார்லோஸ் முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக மன்னர் மாளிகை வெளியிட்ட செய்தியில், மன்னர் ஜுவான் கார்லோஸ் தன் மகன் பிலிப்பிற்கு எழுதிய கடிதத்தை மேற்கோள் காட்டி நான் ஸ்பெயினை விட்டு வெளியேறுகிறேன் என்று கூறியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மகனும் தந்தை கார்லோஸின் இந்த முடிவை ஏற்றுள்ளார்.

மக்கள் அதிர்ச்சிகளுக்கு இடையில் முன்னாள் மன்னர் ஜுவான் கார்லோஸ் ஸ்பெயினை விட்டு வெளியேற ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

ஆனால், ஜுவான் கார்லோஸ், அறிவிப்புக்கு முன்னரே நாட்டை விட்டு வெளியேறி லிஸ்பனில் உள்ள ரிசோர்ட் ஒன்றில் இருப்பதாக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் இதற்கான ஆதாரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

மக்கள் நன்மதிப்பை பெற்ற ஜுவான் கார்லோஸ் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளால், கடும் அதிர்ச்சி அடைந்துள்ள ஸ்பெயின் மக்களுக்கு, அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமா, அல்லது இங்கு சட்டத்தின் சவால்களை எதிர்கொள்ள வேண்டுமா என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

அதிவேக ரயில் ஒப்பந்தத்திற்காக சவுதி அரசரிடமிருந்து மன்னர் ஜுவான் கார்லோஸ், 100 மில்லியன் டொலர்கள் தொகை பெற்றதாக கடந்த மார்ச்சில் குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து தொடர்ந்து இவர் மீது லஞ்ச, ஊழல் புகார்கள் எழுந்தன, இதில் பெற்ற பணத்தை தன் முன்னாள் காதலிக்கு அனுப்பியதாக ஸ்பானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

1975ஆம் ஆண்டு ஜெனரல் பிரான்சிஸ்கோ பிராங்கோ மரணமடைந்த பிறகு ஆட்சியைப் பிடித்த கார்லோஸ், ஸ்பெயினை எதேச்சதிகாரப்பிடியிலிருந்து ஜனநாயகப் பாதைக்கு திருப்பியவர் என்ற அளவில் மிகவும் மதிக்கப்பட்டார்.

இவ்வாறு ஸ்பெயின் நாட்டு மன்னராக 35 ஆண்டுகளுக்கு மேல் இருந்த 82 வயதான ஜுவான் கார்லோஸ், தனது மகன் பிலிப்பை கடந்த 2014 ஆம் ஆண்டு மன்னராக முடிசூட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2077

### பிரியா

மனைவி : "டிபன் வேணுமா?"
கணவன் : "சாய்ஸ் இருக்கா?"
மனைவி : "ரெண்டு இருக்கு!"
கணவன் : "என்னென்ன?"
மனைவி : "வேணுமா?... வேண்டாமா?

### நிசா



எந்த சோப்பு போட்டாலும் வெள்ளை கலர்ல தான் நுரை வருது.

அப்புறம் ஏன்?



சோப்பு மட்டும் கலர் கலரா இருக்கு!!!

### லிசா

நல்ல செருப்புங்க, 300 ருபா இருக்கும்... உள்ள போறப்போ இருந்தது... வெளிய வந்தா காணோம்



சரின்னு என் செருப்பையே போட்டுட்டு வந்துட்டேன்...

### லக்சன்



புரியுது... நீங்க சொல்றது புரியுது.... உங்க வெயிட் நோர்மலாத்தான் இருக்கு...! ஆனா இந்த வெயிட்டுக்கு இன்னும் நீங்க மூனு அடி வளரனும்... கொஞ்சம் குட்டையா இருக்கீங்க...

### தர்சி


கல்யாணமாகி 25 வருடத்துல ஒரே ஒரு தடவைதான் உங்க உங்க கணவர்கிட்ட சண்டை போட்டீங்களா.. ஆச்சரியமா இருக்கே..?



ஆமா... அந்த சண்டையில அவர் வீட்டை விட்டுப் போனவர்தான், 25 வருஷமா திரும்பியே வரலியே..

### ராஜ்

எந்த "புக்"க பார்த்தாலும் தூக்கம் தூக்கமா வருது...



இந்த "பேஸ்புக்" க பாத்தா மட்டும் கருமம் தூக்கமே வரமாட்டேங்குது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புதிய நாடாளுமன்றம் 20 ஆம் திகதி கூடுகிறது

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

**புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடரை எதிர்வரும் 20 ஆம் திகதி கூட்டுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.**

குறித்த வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவின் கையெழுத்துடன் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தில் உள்ள அதிகாரங்களுக்கு அமைய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்ற அமர்வு கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உப பொலிஸ் பரிசோதகர் கைது

(கொழும்பு)


குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுடன் இணைந்து பொய் சாட்சிகளை உருவாக்கியமை தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிற்கு விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டு வாக்கு மூலம் பெற்ற பின்னர் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அம்பிலிபிட்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஜ-4)



# ஆன்மீகம்

## நம்பிக்கை நம்முடைய மூன்றாவது கை!



நம்புகிறேன், ஆகவே நான் வாழ்கிறேன்!' என்றார் அறிஞர் ஒருவர். 'அன்பும், நம்பிக்கையும் ஆத்மாவின் தாய்ப்பால்!' என்கிறார் இன்னொரு அறிஞர். பூரண நம்பிக்கை இல்லாமல் ஒரு செயலோடு ஒருவன் பொருந்துவது என்பது காகிதத்தில் கப்பல் செய்து கடல் நடுவே ஓட விடுவதைப் போல்தான்! உள்ளும் புறமும் மூச்சுக்காற்று வந்து போவதாலா நாம் வாழ்கின்றோம்? அப்படித்தான் என்றால் நாம் உயிரோடு இருக்கிறோம் என்றுதான் பொருளே தவிர உயிர்ப்போடு இல்லை என்பதே நிஜம்! உயிரோடு இருப்பது என்பது உண்பது, உறங்குவது, உலாவிக் கொண்டிருப்பது இவ்வளவோடு முடிந்து விடுகிறது. உயிர்ப்போடு வாழ்வது என்பது சாதித்துக்காட்டுவது, சரித்திரம் படைப்பது உயிர்ப்போடு ஒவ்வொருவரும் இயங்க, ஆட்டம் காணாத ஆணிவேராக அமைய வேண்டியது அசையாத நம்பிக்கைதான்.

வாழ்க்கைக் கப்பலை ஒட்டிச்செல்லும் மாலுமியே நம்பிக்கைதான் 'என்னால் இதை ஏற்புறச் செய்ய முடியும்' என்று ஒருவன் பூரணமாக நம்புகிறபோதுதான் அவனுக்குள்ளிருந்து ஆற்றல் அபரிமிதமாக பொங்கும். 'கிட்டத்தட்ட இச்செயலை நான் செய்துவிடுவேன். இப்பணியை ஒருவாறு முடித்துவிடலாம்' என்று அரைகுறை மனதோடு ஒருவன் காரியத்தில் இறங்கினால் கட்டாயம் அவனால் முழு வெற்றியை ஒருபோதும் பெற இயலாது.

என்னிரு கையும் நம்பிக்கையும்
எனக்கு வாய்த்த மூலதனம்! ஒரு
திண்ணிய எண்ணப்பாதை நடப்பதால்
சிவக்கும் வானம் நாளைதினம்!

- என்று கவிஞர் ஒருவர் அற்புதமாகச் சொற்பதம் தொடுக்கிறார். நம் இருகை உழைப்போடு மூன்றாவது கையாக நம்பிக்கையும் கைகோர்த்துக் கொண்டால் வெற்றி தேவதை தன் இரு கைகளாலும் நம்மை ஆரத்தழுவி அன்பு முத்தங்கள் பொழிவாள் என்பதே சாதனையாளர் பலர் சரித்திரங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம். நம் அறிவிற்கு எட்டாத பல அதிசயங்களையும் நம்பிக்கை நடத்தி காட்டுகிறது என்றால் நம்மால் நம்ப முடியவில்லை என்றாலும் அதுதான் நிஜம்! இந்த விடயத்தில் ஆய்வாளர்களே சற்று அசந்து போகிறார்கள். குழுவாகச் சென்று ஒரே இடத்தில், ஒரே சமயத்தில், ஒரே வகை உணவை வீசி எறிந்து எல்லோரும் மீன்பிடித்தாலும் சிலருக்கு நிறைய மீன்கள் சிக்குகின்றன. எப்போதும் அந்த வெகு சிலர் வெகுவாக மீன்களைப் பிடித்த வண்ணம் கரைக்கு வருகின்றனரே அதற்கான காரணம் என்ன?

அயல் நாட்டு ஆய்வாளர் ஒருவர் அவர்களைப் பேட்டி கண்டார். எப்போதுமே ஏகப்பட்ட மீன்களோடு திரும்புபவர்கள் சொன்னார்கள்: "நாங்கள் அதிகமீன்கள் சிக்க வேண்டும் என்னும் ஆவலோடு மட்டுமே வலை வீசுவதில்லை.

நிறைய மீன்கள் கிடைக்கும் என்று நெஞ்சம் நிறைந்த நம்பிக்கையுடனும் செல்கின்றோம். மீன்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடத்தில் படகினை நிறுத்தி 'மீன்களே! எங்களிடம் வாருங்கள்' என்று மனம் விட்டு நம்பிக்கையுடன் மீன்களைக் கூப்பிடுகின்றோம்.

தவறிப் போயும் வேடிக்கையாக ஏதோ பேசுகிறோம் என்று எண்ணி விடாதீர்கள். எங்களிடம் சிறுவயது முதற் கொண்டே இப்படி அழைக்கும் பழக்கம் இருக்கிறது. எங்களின் நிஜமான, நம்பிக்கையான உழைப்பு வீண் போவதில்லை.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## வாக்காளர் அட்டைகளை சட்டவிரோதமாக பெறமுயன்ற இருவர் கைது

(கொழும்பு)

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விற்க, பணம்கொடுத்து முயன்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினமிரவு பேருவளை பகுதியில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மொத்தமாக நால்வர் 5000 ரூபா கொடுத்து வாக்காளர் அட்டைகளை பெற முயன்றுள்ளனர். இதன்போது இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் இருவர் தப்பியோடியுள்ளனர். இந்த கைது நடவடிக்கையின்போது பொலிஸாரால் அவர்கள் பயன்படுத்திய காரொன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

## மாத்தறை விபத்தில் இரு பெண்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

மாத்தறை- அபறுக்க பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர். அபறுக்க பகுதியில் ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்களுடன் பயணித்து கொண்டிருந்த பேருந்து, காருடன் மோதுண்டு இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் உயிரிழந்த பெண்களின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

## முருகன் சிலை கடத்த முயன்றவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சட்டவிரோதமாக முருகன் சிலை ஒன்றை கடத்தி விற்பனை செய்ய முயற்சித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக மட்டு.தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 | 200 |
| தக்காளி | 100 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 1200 | 130 | 120 | 120 |
| கரட் | 100 | 150 | 150 | 160 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 50 | 60 | 80 |
| வாழைக்காய் | 140 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 100-200 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 100 | 160 |
| பயற்றங்காய் | 60 | 120 | 70 | 30 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 | 320 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 150 | 280 | 260 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 200 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 40-70 | 60-80 |
| இராசவள்ளி | — | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 200 | 180 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 30-40 | 60 |




## சிறந்த ஆயுதம்

ஒருநாள் அக்பர் நந்த வனத்தில் மலர்ந்திருந்த ரோஜாப் பூக்களைப் பார்த்துப் பூமியில் ஒரு சொர்க்கம் உண்டு எனில் அது இந்த நந்தவனம் தான் என்றார்.

அதற்கு பீர்பால், பிரபு இந்த நந்தவனத்திற்கு அழகைத் தருவது இந்த ரோஜா மலர்கள் தான். ஆனால் அழகு எங்கே உள்ளதோ, அங்கே அபாயமும் உண்டு என்றார். ரோஜாப் பூக்களில் உள்ள முட்களைத் தானே நீர் அபாயம் என்று சொல்கிறீர் என்று கேட்டார்.

பீர்பால் அக்பரிடம் அபாயம் என்பது அழகை மட்டுமல்ல வலிமை, செல்வம், புகழ் ஆகிய அனைத்தையும் சூழ்ந்துள்ளது என்றார்.

பீர்பாலின் சொற்கள் அக்பரைச் சிந்திக்கத் தூண்டின. மறுநாள் சபையில் அக்பர், திடீரென்று ஒருவனை அபாயம் சூழ்ந்தால், அவனுடைய தற்காப்புக்காகப் பயன்படும் சிறந்த ஆயுதம் எது? என்று சபையோர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்டார்.

பீர்பாலைத் தவிர சபையில் உள்ள அனைவரும் ஒவ்வொரு ஆயுதத்தின் பெயர்களைக் கூறினார்கள்.

ஆனால் பீர்பால் மட்டும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிந்தித்துச் செயற்படும் அறிவே சிறந்த ஆயுதம் என்றார்.

மறுநாள், அக்பர் சில பிரமுகர்களுடன் நதிக்கரையில் உலாவிக் கொண்டிருந்தபோது பீர்பாலும் உடனிருந்தார்.

அக்பரிடம் அங்கிருந்த மக்கள் திடீரென ஓடோடி வந்து, பிரபு ஆபத்து, அபாயம். பட்டத்து யானைக்கு திடீரென மதம் பிடித்துக்கொண்டது. அது இந்தப் பக்கமாகத்தான் ஓடி வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் உடனே ஓடிவிடுங்கள் என்று கூச்சலிட்டனர்.

அக்பர் தன் வாளினாலோ, ஈட்டியினாலோ யானையை ஒன்றும் செய்ய முடியாது. அதற்காக ஒரு கோழையைப் போல் பயந்து ஓடவும் முடியாது என்று எண்ணி செய்வதறியாது செயலற்று நிற்க, பீர்பால் சட்டென்று அங்கிருந்த பூனையைப் பிடித்து யானையின் முதுகில் வீசியெறிந்தார்.



யானையின் முதுகில் விழுந்தால் மிரண்ட பூனை, தன் நகங்களால் யானையைப் பிறாண்டியது. வலி பொறுக்க முடியாத யானை தன் தும்பிக்கையினால் பூனையைப் பிடிக்க முயல அது தப்பித்துக் கீழேயிறங்கி ஓடியது.

யானையின் கோபம் முழுவதும் பூனையின் பால் திரும்ப, அது பூனையைத் துரத்திக் கொண்டே எதிர்த் திசையில் ஓடியது. யானையின் கவனம் திசை திரும்ப அக்பரும் மற்றவர்களும் யானையிடம் சிக்காமல் தப்பினர். அக்பர் பீர்பாலைப் பார்த்து பீர்பால் சபாஷ், அறிவு தான் சிறந்த ஆயுதம் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டாய். சூழ்நிலைக்கு ஏற்றவாறு மூளையைப் பயன்படுத்தி சிந்தி த்து செயற்படுவதே சாலச் சிறந்தது என்ற உண்மையை எங்களுக்குப் புரிய வைத்து விட்டாய்.

நீ சொன்னதே சரி. உன்னைப் போன்ற அறிவாளி அருகிலிருந்தால் எந்த அபாயத்தையும் எதிர்கொள்ளலாம் என்று மனதாரப் பாரார்ட்டினார்.

**நீதி: அறிவாளி உன் அருகில் இருந்தால் அபாயம் உன் அருகில் வராது. மேலும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மூளையைப் பயன்படுத்தி சிந்தித்துச் செயற்படுவதே சாலச்சிறந்தது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்




சேரர்களின் சாம்ராஜ்ஜியம் மெள்ள மெள்ளத் தன் பக்கம் இழுத்துக் கொண்டுவிட்டால் தொல்லைகள் ஒழிந்தன. எதிரிகளை வீழ்த்தும் வியூகத்தை கணக்கிட்ட போது சோழர் சாம்ராஜ்ஜியம் விரிவடைந்து கொண்டே போனது.

தன் மனக்கண்ணால் அதைப்பார்த்து பரவசமடைந்தான் ராஜராஜன்.

சோழர் வரலாறு என்பது ஆயிரம் வருடம் பாரம்பரியம் கொண்ட ஓர் இனம். அதன் எதிர்காலம் மிகவும் நம்பிக்கையூட்டக் கூடியதாக இருந்தது ராஜராஜனுக்கு. பிற்காலத்தில் திட்டம் கிடக்கட்டும். முதலில் தன் தூதரை மீட்போம் என்று இறங்கினார் ராஜராஜன்.

குடமலையையும் உதகையையும் ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான் என்று முடிவெடுத்தார்.

குடமலைப்போரில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. சேரர்களுடனான போரை வெல்வதில் சோழர்களுக்குப் பெரிய பிரச்சினை இருக்கவில்லை.

ஆனால், சேரர் படையைச் சேர்ந்த மனிஜா என்ற வீரரின் விவேகமும் கண்ட ராஜராஜன் அவரைக் கொல்லவும் இல்லை, கைது செய்யவுமில்லை.

அவர் வீரத்திற்குக் கௌரவம் ஏற்படுத்த நினைத்தார். மனிஜாவைத் தஞ்சைக்கு அழைத்தவர், சத்திரிய சிகாமணி கொங்காள் என்கின்ற பட்டத்தைச் சூட்டி, மாளவி என்கின்ற குடகுப்பகுதி கிராமத்தை அவருக்கு நன்கொடையாகக் கொடுத்தார்.

அரசியல் அன்றி வேறென்ன? சேரர் படையைச் சேர்ந்த ஒருவர் தனக்குச் சாதகமாக இருக்க வேண்டும். சேரர் படைகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளவேண்டும். மனிஜா, சோழர்கள் கைப்பிடிக்குள் விழுந்தார்.

இடையே, ராஜேந்திர சோழனின் திறமை மீது ராஜராஜனுக்கு அதிக நம்பிக்கை வந்தது.

தமக்குப் பிறகும் சோழர்களின் ஆட்சி நிச்சயம் பத்திரமாகத்தான் இருக்கப் போகிறது என்கிற திருப்தி ராஜேந்திரனைப் பார்க்கின்ற போதெல்லாம் வந்தது. ராஜேந்திரனையே போர்ப்படைகளுக்குத் தலைமை தாங்க அதிகாரமளித்தார்.

குடமலையை வென்ற சோழர்படை மீதமுள்ள சேரர் பகுதிகளையும் வெல்லத் துடித்தது. தன் தூதரை அவமானப்படுத்தியதற்கு இன்னும் தக்கபதிலடி கொடுக்க வேண்டும் என்று ராஜராஜன் எண்ணினார்.

திருவாலங்காட்டுச் செப்புப் பட்டயத்தில் உள்ள விழிஞம் என்பது திருவனந்த புரத்திற்கு தெற்கேயுள்ள பகுதி. இப்பகுதியிலுள்ள காந்தளூரை வெல்ல சோழர்படை விரைந்தது.

வரலாற்று ஆய்வாளர்களுக்கிடையே காந்தளூர்ச்சாலையைக் கைப்பற்றியதுதான் ராஜராஜ சோழனின் முதல் பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

இந்தப் போரின் தொடக்கம், தூதரைக் கைது செய்தது. அதன் தொடர்ச்சி ராஜராஜன் போரைத் தொடங்கியது. விளைவு, காந்தளூர்ச்சாலைப் போர்.

சரி,அது என்ன காந்தளூர்? ஏன் அங்கு போய் போர் புரிய வேண்டும்? இந்த வெற்றிக்கு ஏன் வரலாற்றில் அப்படியொரு முக்கியத்துவம்? இந்தக் காந்தளூர்ச்சாலை என்ற பகுதி எங்கேயிருக்கிறது? அது என்ன கலமறுத்தளி?

(தொடரும்)

நற்செயல்கள் அனைத்தும் இறுதியில் பலன் அளித்தே தீரும் என்பது என் உறுதியான நம்பிக்கை. *~ காந்தியடிகள்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நேர்மையான தேர்தல் நடைபெற அனைவரும் ஒத்துழைப்போம்

இன்று பாராளுமன்றப் பொதுத் தேர்தல்.

தேர்தலுக்கான அத்தனை ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தவிர, அனைத்து வாக்காளர்களும் தமது வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்குமாறு சகல தரப்பினரும் கேட்டுள்ளனர்.

இவை ஒருபுறமிருக்க, இன்று நடைபெறுகின்ற தேர்தல் சுமுகமாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறும்போது அது ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்தும்.

இதற்கு மேலாக, வாக்களிப்பு, வாக்கெண்ணல், பதிவிடல், வெற்றி பெற்றவர்களைத் தெரிவு செய்தல் என்ற பணிகள் மிகவும் நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையாகவும் நூறு வீத நம்பகத்தன்மையுடனும் நடந்தாக வேண்டும்.

தேர்தல் நடந்து முடிந்த பின்னர் எந்த மறுவும் இல்லாமல் தேர்தல் நடந்தது என்று கூறுமளவுக்கு தேர்தலின் அத்தனை விடயங்களிலும் நேர்மையும் வெளிப்படைத்தன்மையும் உண்மைத்தன்மையும் இருக்க வேண்டும்.

இதற்கு அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்குவது கட்டாயமாகும்.

ஏனெனில் இன்று நடைபெறுகின்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற அத்தனை அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே தேர்தலில் களமிறங்கியுள்ளன.

அதேநேரம் வாக்காளர்கள் தாம் வழங்குகின்ற வாக்குகள் ஒவ்வொன்றும் இந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கானது என்ற நம்பிக்கையிலேயே வாக்களிக்கின்றனர்.

எனவே தேர்தல் என்பது நூறு வீத நேர்மையுடன் நடந்தாக வேண்டும். இது மிகவும் முக்கியமானது.

அதேநேரம் வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்கு எண்ணுகின்ற இடங்களிலும் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் சார்பில் கண்காணிப்பில் ஈடுபடுகின்றவர்கள் தங்கள் கடமையைச் சரியாகவும் திறமையாகவும் முழுமையாகவும் செய்யும்போது தேவையற்ற ஐயங்களுக்கும் ஊகங்களுக்கும் இடமில்லாமல் போகும்.

ஆக, இன்று நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல் சுமுகமாக – நேர்மையாக – நீதியாக – வெளிப்படைத்தன்மையாக–உண்மைத்தன்மையாக நடந்தேறட்டும். இறைவனும் துணை நிற்பான்.

# தேர்தல்கள் ஆணையாளரின் அறிவிப்பு தொடர்பில் பெருமிதமடையும் சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையங்கள் தான் பொதுமக்களுக்குரிய மிகவும் பாதுகாப்பான இடம் என்றும், எனவே வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகைதர அஞ்சத் தேவையில்லை என்றும்தேர்தல்கள் ஆணைக குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளமையானது பாதுகாப்புக் கட்டமைப்புக்களின் உயர் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இம்முறை தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருக்கும் வாக்காளர்கள் முகக்கவசங்களை அணிவதுடன், கைகளையும் நன்கு கழுவி, சமூக இடைவெளியைப் பேணியவாறு உரிய சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக வாக்களிக்க வேண்டும் என்று சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு கேட்டுக் கொண்டிருக்கிறது.

நாடளாவிய ரீதியில் தயார் செய்யப்பட்டிருக்கும் 12ஆயிரத்து 985 வாக்களிப்பு நிலையங்களிலும் மிகவும் பாதுகாப்பான முறையில் பொதுத் தேர்தலை நடத்தி முடிப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக் குழுவினால் மிகவும் உயர்ந்த நுணுக்கங்களுடன் கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை நாட்டின் அனைத்து மக்களும் பாதுகாப்பானதும் அமைதியானதுமான முறையில் வாக்களிப்பதற்குத் தகுந்த சூழலை உருவாக்குவதில் சுகாதாரப் பிரிவு அதிகாரிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள், ஊடகங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பவற்றினால் வழங்கப்பட்ட பங்களிப்பிற்கும் சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு வரவேற்புத் தெரிவித்துள்ளது. (ஐ-4)

# எவ்வித தேர்தல் மோசடிகளும் இடம்பெற வாய்ப்பில்லை

## தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

தேர்தல் நடைபெறும் நேரத்தில் எவ்வித தேர்தல் மோசடிகளும் இடம்பெற வாய்ப்பில்லை என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்து, அடிவாங்கி தலையில் துப்பாக்கியை வைத்து வாக்களித்த காலமும் இருந்தது. ஆனால் இப்போது யாரும் அவ்வாறுசெய்வதில்லைஎனவும் அவர் தெரிவித் துள்ளார்.

வாக்குப் பெட்டிகள் மாற்றப்பட்லாம் என்ற கருத்து வெறும் கற்பனை மாத்திரமே இம்முறை தேர்தலில் அது ஒன்றும் நடக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஐ-4)

## சுகாதார நடைமுறைகள் அவதானிக்க 450 பேர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலே தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஆளணியினராக 8 ஆயிரத்து 235 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேடமாக சுமார் 450 பேர் சுகாதார நிலைமைகளை அவதானிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். இம்முறை சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றி தேர்தலை நடத்துவது கட்டாயமாகவுள்ள காரணத்தால் அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். (5-8)

## வாக்காளர் அட்டைகள் பெறாதவர்களுக்கானது

(கொழும்பு)

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இதுவரை பெறாத வாக்காளர்கள் இன்று புதன்கிழமை தபால் அலுவலகங்களில் அவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

தங்களுடைய பிரதேச தபால் அலுவலகத்திற்கு சென்று அடையாளத்தை உறுதிப்படுத்தி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை பெற்றுக் கொள்ள முடியும் என பிரதி தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் வாக்காளர் அட்டை இல்லாவிடினும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தங்களது அடையாளத்தை உறுதி செய்ததன் பின்னர் வாக்களிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் துரித வளர்ச்சி அடையும் கிளிநொச்சி வைத்தியசாலை

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் ஒட்சிசன் உற்பத்தி செய்யும் மையத்தில் உள்ள பெறுமதிமிக்க கருவிகளுக்குள் மணல் இட்டு செயலிழக்கச் செய்ய முயன்ற சம்பவமொன்று கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

எனினும் நிர்வாகத்தினரின் உடன நடவடிக்கை மூலம் உரிய அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டு குறுகிய நேரத்தினுள் மறுசீரமைக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 6 மாத காலங்களில் குறித்த வைத்தியசாலை துரித வளர்ச்சி கண்டு வருகிறது. அதனைப் பொறுக்க முடியாத சில விசமிகளே இந்த நாசவேலைகளில் ஈடுபட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வைத்தியசாலையில் இவ்வாறான செயற்பாடு இத்தோடு மூன்றாவது தடவையாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-8-100)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உண்மையே நிலையானது. அதன் அளப்பரிய சக்தி பாதுகாப்பளிக்கும் என்பதை உணர்ந்து உண்மை என்ற ஆயுதத்தை எப்போதும் தரித்துக் கொள்ளுங்கள். -பரமானந்தர்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### நல்லவரோடு பழகுங்கள்

❖ இன்பத்தைக் கண்டு மகிழும் மனிதன், துன்பம் கண்டு துவள்வது கூடாது. ஏற்றத்தாழ்வு என்பது வாழ்வில் சகஜமானது.

❖ புகழைக் கண்டு மயங்காத நல்லவர்களும் உலகில் இருக்கவே செய்கிறார்கள்.

❖ நல்ல நூல்கள் மனக்கோணலை நிமிர்த்தி, மனிதனை நேர்வழியில் நடக்கச் செய்து விடும்.

❖ படிப்பால் உண்டாகும் அறிவை விட, அனுபவத்தால் கிடைக்கும் அறிவே உயர்ந்தது.

❖ நல்லவர்களின் நட்பைப் பெறாவிட்டால் வாழ்வில் முன்னேற்றம் ஒருநாளும் உண்டாகாது.

# உள்நாட்டு வீரர்கள் பயிற்சியை தொடங்க நடைமுறைகள் என்ன?

## அறிவித்தது இந்திய கிரிக்கெட் வாரியம்

உள்நாட்டு கிரிக்கெட் வீரர்கள் பயிற்சியை தொடங்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டுதல் நடைமுறைகளை இந்திய கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பயிற்சி முகாமில் பணியாற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தாக்கம் காரணமாக கடந்த மார்ச் மாதம் மத்தியிலிருந்து இந்தியாவில் கிரிக்கெட் உட்பட எந்தவொரு விளையாட்டு போட்டியும் நடைபெறவில்லை. நாளுக்கு நாள் கொரோனாவின் பரவல் தீவிரமாகி வருவதால் கிரிக்கெட் வீரர்கள் பயிற்சியை வெளிப்புற மைதானங்களில் தொடங்க இன்னும் அனுமதி அளிக்கப்படவில்லை.

இந்த ஆண்டுக்கான கிரிக்கெட் சீசன் வழக்கமாக இந்த மாதம் தொடங்கும். தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக உள்ளூர் வீரர்களுக்கான பயிற்சி மற்றும் போட்டிகளை தொடங்குவது காலதாமதமாகி வருகிறது.

இந்த ஆண்டுக்கான கிரிக்கெட் போட்டிகளை தொடங்குவது எப்போது? என்பது குறித்து இந்திய கிரிக்கெட் வாரியம் இன்னும் முடிவு செய்யவில்லை. இருப்பினும் உள்நாட்டு கிரிக்கெட் போட்டிக்காக வீரர்கள் தங்களது பயிற்சியைத் தொடங்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டுதல் நடைமுறைகளை இந்திய கிரிக்கெட் வாரியம் வகுத்துள்ளது. 100 பக்கங்கள் கொண்ட அந்த வழிகாட்டுதல் நடைமுறையில் வீரர்கள் மற்றும் பயிற்சி ஊழியர்கள் என்ன செய்ய வேண்டும், எதனை செய்யக்கூடாது என்பது குறித்து விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாநில கிரிக்கெட் சங்கங்கள் மற்றும் தேசிய கிரிக்கெட் அகடமிக்கு அனுப்பப்பட்டு இருக்கும் இந்த வழிகாட்டுதல் நடைமுறையில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு.

பயிற்சி முகாம் தொடங்குவதற்கு முன்பாக பயிற்சியில் பங்கேற்கும் வீரர்கள், பயிற்சியாளர் மற்றும் ஊழியர்கள் அனைவரும் 'ஒன்-லைன்' மூலம் ஒப்புதல் படிவத்தில் கையொப்பமிட வேண்டும். அதாவது பயிற்சியின் போது கொரோனா பாதிப்பை எதிர்கொள்ள நேரிட்டால் அதனால் ஏற்படும் இன்னல்களுக்கு தாங்களே பொறுப்பு என்பதை ஏற்க சம்மதம் தெரிவிக்க வேண்டும். வீரர்கள் மற்றும் பயிற்சி ஊழியர்களின் உடல் நலம், பாதுகாப்புக்கு அந்தந்த மாநில கிரிக்கெட் சங்கங்களே பொறுப்பேற்க வேண்டும்.

பயிற்சியாளர், உதவி பயிற்சியாளர், மைதான ஊழியர் உள்ளிட்ட எந்தவொரு பணியிலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை அனுமதிக்கக்கூடாது. மத்திய அரசின் வழிகாட்டுதல் நடைமுறை அனுமதிக்கும் வரை அவர்களைப் பயிற்சிக்கு பயன்படுத்தக்கூடாது. அதுபோல் உடல் நலப்பிரச்சினை உடைய யாரையும் பயிற்சி முகாமில் பங்கேற்க இடம் கொடுக்கக்கூடாது.

வீரர்கள் தாங்கள் தங்கி இருக்கும் இடத்தில் இருந்து பயிற்சி நடைபெறும் இடத்துக்கு வருகையில் பாதுகாப்பு நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அத்துடன் அனைவரும் தாங்கள் சொந்த வாகனத்தில் வரவேண்டியது அவசியமானதாகும்.

உள்ளூர் நிர்வாகத்திடம் முறையான அனுமதி பெற்று வைத்தியர் குழு வசதியுடன் பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும். பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்களிடம் கடந்த 2 வார காலத்தில் மேற்கொண்ட பயணங்கள், மருத்துவ நிலை குறித்த விபரங்களை கேட்டுப் பதிவு செய்ய வேண்டும். யாருக்காவது கொரோனாத் தொற்று இருப்பதாகச் சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக பரிசோதனை நடத்தப்பட வேண்டும். பயிற்சி முகாமில் பங்கேற்கும் அனைவருக்கும் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை கொரோனாப் பரிசோதனை செய்ய வேண்டும். அந்த இரண்டு சோதனையிலும் 'நெகட்டிவ்' என்று முடிவு வந்தால் மட்டுமே பயிற்சி முகாமில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும். அனைவரும் 'ஆரோக்ய சேது' செயலியை பயன்படுத்த அறிவுறுத்த வேண்டும்.

பயிற்சி முகாம் தொடங்கும் முன்பு வைத்தியர் குழு சார்பில் ஒன்-லைன் மூலம் வீரர்களுக்கு மருத்துவ கருத்தரங்கு நடத்தி ஆலோசனைகள் வழங்க வேண்டும். பயிற்சி நடைபெறும் இடங்களில் வெளியாட்கள் யாரையும் அனுமதிக்கக்கூடாது. சுகாதார நடைமுறைகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும், பயிற்சியின் போது வீரர்கள் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும்.

மேலும் பொது இடங்களிலும் பயிற்சிக்கு வருகையிலும் முகக்கவசம் அணிய அறிவுறுத்த வேண்டும். பந்தை பளபளக்க வைக்க எச்சிலை பயன்படுத்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தடை விதித்து இருப்பதால், பயிற்சியின் போது பந்தை எச்சிலை கொண்டு பளபளப்பாக்க அனுமதிக்கக்கூடாது போன்ற விடயங்களும் அந்நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (4)

# யாழ்.கிரிக்கெட் சம்பியன்-2020 டிறிபேர்க் 2ஆவது சுற்றுக்குத்தகுதி



முதலாவது சுற்றுத் தொடரில் சாவகச்சேரி டிறிபேர்க் ஸ்ரார் திருநெல்வேலி கிரிக்கெட் கழகத்தை 66 ஓட்டங்களால் வெற்றிபெற்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி டிறிபேர்க் ஸ்ரார் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. போட்டியில் நிதர்ஷன் 65 ஓட்டங்களையும் சங்கீதன் 42 ஓட்டங்களையும் தசீன்தன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகத்தின் சுரேஷ் 3 விக்கெட்டுக்களையும் சுரேந்திரன், பிரபுலன் 2 விக்கெட்டுக்களையும் அயன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 24.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. போட்டியில் சுரேஷ் 28 ஓட்டங்களையும் அயன் 20 ஓட்டங்களையும் தர்சிகன், றஜின்தன் 18 ஓட்டங்களையும் லவகாந் 12 ஓட்டங்களையும் சுரேந்திரன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சாவகச்சேரி டிறிபேர்க் ஸ்ரார் அணியின் சாகித்தியன் 5 விக்கெட்டுக்களையும் நிதர்ஸன், பிரதீப் 2 விக்கெட்டுக்களையும் தசீன்தன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.


இப்போட்டி மூலம் சாவகச்சேரி டிறிபேர்க் ஸ்ரார் அணி 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. (4)

# பாகிஸ்தான் டெஸ்ட்;இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக ஜொனாதன்

பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்காக, இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக முன்னாள் வீரர் ஜொனாதன் ட்ரோட் நியமிக்கப்பட்டுள்ளார்.

39 வயதான ஜொனாதன் ட்ரோட், இதுவரை 52 டெஸ்ட், 68 ஒருநாள் மற்றும் 81 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். குறிப்பாக முதற்தர போட்டிகளில் 18,662 ஓட்டங்களை குவித்துள்ளார்.

முன்னாள் அணித்தலைவர் போல் கோலிங்வுட் இரண்டாவது மற்றும் மூன்றாவது டெஸ்டுக்கு உதவி பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



மேலும், நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஜீடன் பட்டேல் மற்றும் வார்விக்ஷயர் வேகப்பந்து வீச்சாளர் கிரேம் வெல்ச் ஆகியோரும் பந்துவீச்சு பயிற்சியாளர்கள் குழுவில் இணைந்துள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்துக்கு சென்றுள்ளது.

இத்தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி, இன்று 5 ஆம் திகதி மன்செஸ்டர்- ஓல்ட் ட்ரப் போர்ட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முன்னதாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (4)

# வேண்டுமென்றே இருமினால் ரெட் கார்டு

## இங்கிலாந்து கால்பந்து சங்கம் எச்சரிக்கை

கால்பந்து போட்டியின்போது எதிரணி வீரர்களின் முகம் அருகே அல்லது நடுவர் முகம் அருகே வேண்டுமென்றே இருமினால் தடைவிதிக்கப்படும் என இங்கிலீஷ் கால்பந்து சங்கம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவிய பின்னரும் ஐரோப்பிய நாடுகளில் கால்பந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ரசிகர்கள் இல்லாமல் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

ஒரு வீரரிடம் இருந்து மற்றொரு வீரருக்கு கொரோனாத் தொற்று பரவாமல் இருக்க பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

மைதானங்களில் அடிக்கடி துப்பக்கூடாது. வீரர்கள் சந்தோசத்தில் ஒருவருக்கொருவர் கட்டிப்பிடிக்கக் கூடாது. முடிந்த அளவு சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும் என்று வீரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒரு வீரர் மற்றொரு வீரர் முகம் அருகே அல்லது நடுவர் முகம் அருகே சென்று வேண்டுமென்றே இருமினாலும் அவரை ரெட் கார்டு கொடுத்து வெளியே அனுப்பலாம். அல்லது மஞ்சள் அட்டை கொடுத்து தண்டிக்கலாம் என நடுவருக்கு அதிகாரம் கொடுக்கும் வகையில் இங்கிலாந்து கால்பந்து சங்கம் வழிகாட்டு நெறிமுறையைத் திருத்தம் செய்துள்ளது. (4)

# இருபது-20 தொடரை ஒத்திவைத்தது அவுஸ்திரேலிய அணி

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை, அவுஸ்திரேலியா கால வரையறையின்றி ஒத்திவைத்துள்ளது. இம்மாதம் முதல் வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த இந்த தொடரை, ஒத்திவைப்பது குறித்து இரு கிரிக்கெட் சபைகளுக்கிடையேயான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, நேற்றுக் காலை இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

இந்தத் தொடர் பத்து-10 உலகக்கிண்ண தொடருக்கு முன்னதாக நடைபெறவிருந்தது. ஆனால் தற்போது உலகக்கிண்ணத் தொடர் ஒத்திவைக்கப்பட்டதால், மேற்கிந்திய தீவுகள் அணியுடனான இருபது-20 தொடரின் மூலம் அதிக இலாபம் கிடைக்காது என நம்பப்படுகின்றது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரின் முதல் போட்டி நேற்று டவுன்ஸ்வில்லே மைதானத்திலும் இரண்டாவது போட்டி நாளை கெய்ர்ன்ஸ் மைதானத்திலும், மூன்றாவது போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி கோல்ட் கோஸ்டிலும் நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## பருத்தித்துறை...

தும்பளையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த எஸ்.மரின்ராஜ் (வயது - 23) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (ம-3,60)

## சுகாதார நடை...

வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளும் சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களும் தேர்தல் மத்திய நிலையத்திலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளை நேரகாலத்துடன் சென்று வாக்களிப்பினை மேற்கொள்ள வேண்டும். சுகாதார நடைமுறை மற்றும் சமூக இடைவெளியை பேணி முகக் கவசம் அணிந்து வாக்களிக்க முடியும்.

சுகாதார நடைமுறையை பின்பற்றுவதற்காக மேலதிகமாக சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களும் சுகாதார உத்தியோகத்தர்களும் அங்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வாக்காளர்கள் எவ்வித பயமுமின்றி தங்களுடைய வாக்குரிமையை செயல்படுத்த முடியும். அதற்குரிய சுகாதார நடைமுறைகள் சம்பந்தமான விடயங்கள் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## பேருந்து மீது...

பருத்தித்துறைசாலைக்கு சொந்தமான பஸ் வண்டி நேற்று செவ்வாய்க்கிழமை மாலை பருத்தித்துறையில் இருந்து கட்டைக்காடு நோக்கி சென்று கொண்டிருந்த போது இரவு 7.00 மணியளவில் நாகர் கோவில் பகுதியில் வைத்து இனந்தெரியாத குழு ஒன்றினால் கல்வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் பஸ் வண்டியின் பின்பக்க கண்ணாடிகள் சேதம் அடைந்துள்ளதாக சாலை முகாமையாளர் தெரிவித்தார். (ம-3,60)

## துப்பாக்கிச் சூடு...

ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனினும் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ஆயுதமேந்திய இரண்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## தேர்தலுக்கான...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

விருப்பு வாக்கு பெறுபேறுகளை வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்கு முன்னதாக வெளியிடக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணுவதற்கு கூடுதலான நேரம் தேவைப்படும். வாக்களிப்பு இடம்பெற்ற பின்னர் வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் விரைவாக எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தேர்தல் நடைபெறும் இன்றைய தினம் பாதுகாப்பு தொடர்பில் எந்தவித பிரச்சினையும் இல்லை. குழப்பநிலை ஏற்படக்கூடிய வாக்களிப்பு பிரதேசங்களில் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கலகங்களை அடக்கும் படைப் பிரிவினர் தேவையில்லை. அவ்வாறானதொரு நிலை ஏற்படாது. இருப்பினும் நாம் அதற்கு தயாராக உள்ளோம். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் தேர்தல் முடிவுகளை வெளியிடக்கூடியதாக இருக்கும். விருப்பு வாக்குகள் தொடர்பான பெறுபேறுகளை 7ஆம் திகதி நள்ளிரவிற்கு முன்னர் வழங்கக்கூடியதாக இருக்கும்.

ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி தேர்தல் தொடர்பான முழுமையான வர்த்தமானியை வெளியிடக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பாராளுமன்ற...

தேர்தல் மாவட்டங்களில் 12,985 வாக்களிப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. 166 தேர்தல் தொகுதிகளில் இருந்து 196 பேரை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதற்காக இன்று பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

இம்முறை பொதுத்தேர்தலில் 7,452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட 40 அரசியல் கட்சிகள் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடுவதுடன், 312 சுயேட்சைக் குழுக்களும் 2020 பொதுத்தேர்தலில் களமிறங்கியுள்ளன. 1,62,63,885 பேர் இம்முறை தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவிலான வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். அங்கு 17,85,964 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 13,48,787 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மிகக் குறைவான வாக்காளர்கள் வன்னி மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர். அங்கு 2,87,024 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ம-3)

## அச்சமின்றி...

மையை தவறாது பயன்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இன்று வாக்களிப்பு நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் மறுநாள் 6ஆம் திகதி காலை 8 மணி முதல் அந்தந்த மாவட்டங்களில் வாக்கெண்ணும் செயற்பாடு ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்காக 77 வாக்கெண்ணும் நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கோவிட்-19 தொற்று பரவலுக்கு மத்தியில் விசேட சுகாதார வழிமுறைகளுக்கு அமைய இந்த முறை பொது தேர்தல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதேநேரம் பொதுத் தேர்தலின் முதலாவது பெறுபேறாக மாத்தறை மாவட்டத்தின் பெறுபேறினை வெளியிட முடியும் என தாம் எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ம-3)

## தேர்தல் அமைதிக்...

கள் மற்றும் சுயேட்சைக்குழுக்களின் வேட்பாளர்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கஞ்சாவுடன் இருவர் கைது

(கொழும்பு)

ஒரு கோடி பெறுமதியான கஞ்சா பயிர்ச்செய்கை மேற்கொண்ட இரண்டு சந்தேக நபர்களை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

சூரியவெவ பகுதியில் வைத்தே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஹம்பேகமுல, அலுத்வெவ, கிளிம்புன்ன வனப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த கஞ்சா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ம-3)

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) இதனை தெரிவித்துள்ளது.

தற்போதைய அமைதியான சூழலிலும் சில அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

மத விழாக்களை ஏற்பாடு செய்வதாக கூறி சிலர் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதாகவும் திணைக்களத்தின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவங்ச குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## விசமப் பிரசாரங்...

கருத்துரைத்துள்ளன.

தேர்லில் போட்டியிடும் சில கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு எதிராக விசமப் பிரசாரங்கள் செய்யப்படலாமெனவும் போலிப் பிரசாரங்கள் போலிப் பெயரைப் பயன்படுத்தி அவற்றைப் பொது அமைப்புகள் போலக் காட்டி போலிப் பிரசாரங்களும் அறிக்கைகளும் வதந்திகளும் பரப்பப்படலாமெனவும் இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-3)

## வன்முறை...

விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

வன்முறைகள் இடம்பெறும் என எதிர்பார்க்காத போதிலும் பொலிஸார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விசேட அதிரடிப் படையினரை பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களையே பயன்படுத்தப் போவதாகவும் படையினரை பயனபடுத்தப் போவதில்லை என்றும் தேர்தல்கள்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த தேர்தல்களின்போது இருந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு குருநாகல், அம்பாந்தோட்டை, அம்பாறை, நாவலப்பிட்டி, புத்தளம் போன்ற பகுதிகளில் முக்கிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த இடங்களில் கண் காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறப்புக் குழுக்களை நிறுத்தியுள்ளதாக பெப்ரல் அமைப்பு அறிவித்துள்ளது. (ம-3)

தன நிதானய
திகதி - 2020.08.04
சீட்டிழுப்பு இலக்கம் - 299
M 06 15 21 68
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 04-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2499
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
S 22 30 41 71
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/08/04
சீட்டிழுப்பு இலக்கம் 4204
ஆங்கில எழுத்து
வெல்லப்பட்ட இலக்கங்கள்
D 8 1 7 4 4 3

நீரோகா
திகதி 04/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0692
லக்கினம்
வெற்றி இலக்கங்கள்
மீனம் 01 35 40 44

மெகா பவர்
திகதி 04/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 571
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க
வெற்றி இலக்கங்கள்
M 03 02 09 63 71

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1001
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.08.04
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 58,205,105/-
வெற்றி இலக்கங்கள்
07 33 49 52
ஆங்கில எழுத்து
K

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2882
வர்ணம் சிவப்பு
திகதி 04.08.2020
வெற்றி இலக்கங்கள்
07 11 55 60
இடபம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 4,452,641
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1678
சீட்டிழுப்பு திகதி 04.08.2020
வெற்றி இலக்கங்கள்
01 06 36 52
ஆங்கில எழுத்து
I
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 51,681,744
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 607
இளம் சிவப்பு
திகதி: 04.08 2020
P 14 48 55 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.
79,525,200
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## அளிக்கப்படும் வாக்குகளை யாராலும் இனங்காண முடியாது

# எவ்வித அச்சமுமின்றி கட்டாயம் வாக்களியுங்கள்

## பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டி ஆராச்சி மக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

**அளிக்கப்படும் வாக்குகள் யாருக்கு செலுத்தப்பட்டது என்பது தொடர்பில் யாராலும் இனம் காணமுடியாது. அவ்வாறான பிரசாரங்கள் உண்மைக்கு புறம்பானது. அதனால் வாக்காளர்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாக்களிக்கலாம் என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டி ஆராச்சி கோரிக்கை விடுத்துள்ளார்**



வாக்களிப்பு மத்திய நிலையங்களில் அளிக்கப்படும் வாக்குகள் யார், எந்தக் கட்சிக்கு வாக்களித்தார்கள் என்பது தொடர்பில் அறிந்து கொள்ளலாம் எனத் தெரிவித்து வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

வாக்களிப்பு மத்திய நிலையங்களில் அளிக்கப்படும் வாக்குகள் யார் எந்த கட்சிக்கு தனது வாக்கை அளித்தார் என்பதை தங்களால் அறிந்து கொள்ள முடியும். அதனால் வேறு கட்சிகளுக்கு வாக்களித்து மாட்டிக் கொள்ளவேண்டாம்.

ஒருசில வேட்பாளர்கள் வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். தேர்தல் பிரசார காலங்களில் தேர்தல் பிரசார மேடைகளிலும் இவ்வாறு பகிரங்கமாக தெரிவித்திருக்கின்றனர்.

வாக்களிப்பு நிலையங்களில் மிகவும் பாதுகாப்பான சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவும் சுகாதார பிரிவினரும் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதேபோன்று அளிக்கப்படும் வாக்காளர்களின் இரகசியத்தன்மை நூறுவீதம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது

வாக்காளர்களால் அளிக்கப்படும் வாக்கு, யாருக்கு அளிக்கப்பட்டமை தொடர்பில் யாரும் அறிந்துகொள்ள முடியாது.

அவ்வாறு அறிந்து கொள்ளலாம் என தெரிவிப்பது, உண்மைக்கு புறம்பானது என்பதுடன் வாக்காளர்களை பயமுறுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் செயலாகும்.

அதனால் அவ்வாறான எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல் வாக்காளர்கள் அச்சமின்றி சுதந்திரமாக தங்களது வாக்குகளை அளிப்பதற்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

அத்துடன் வாக்களிக்கச் செல்லும்போது செல்லுபடியாகும் அடையாள அட்டையை கொண்டு செல்ல தவறக்கூடாது. அதேபோன்று உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் 2019 வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் பதிவு செய்திருப்பதை உறுதிப் படுத்திக்கொண்டு அங்கீகரிக் கப்பட்ட அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கலாம். அதற்கான அனுமதியை தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கி யிருக்கின்றது என்றார். (ம-3)


### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளது

- **உதவி ஆசிரியர்கள்**
  (இருபாலாரும்)
  தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.
- **அலுவலகச் செய்தியாளர்கள்** (ஆண்கள்)
  (உள்ளகம், வெளியகம்)
  தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.
- **பக்க வடிவமைப்பாளர்கள்**
  (தமிழ் ரைப்பிங், விளம்பர வடிவமைப்பு உட்பட)
  தகைமை : க.பொ.த (சாதாரண தரம்)
- **ஒப்பு நோக்குநர்**
  (இருபாலாரும்)
  தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.

தகைமையும், விருப்பமும் உடையவர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தை தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ ஒப்படைக்கவும்.

குறிப்பு : யாழ். நகரை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இ)

முகவரி :- பொது முகாமையாளர்,
வலம்புரி,
இல. 3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

2D-Drawing ( Civil &
3D-Modeling ) Mech
Auto CAD
LINK:077 5116320 - 071 8617972

மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-9976)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



தேவை

நெல்லியடி வதிரிச் சந்திக்கு அருகாமையில் இயங்கும் பப்படத் தொழிற்சாலைக்கு உற்பத்தி மற்றும் பொதியிடல் தேவைக்காக ஆண், பெண் ஊழியர்கள் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (C-9989)
077 514 4943

FOR SALE
விற்பனைக்கு
1. Examination Bed (2)
2. M.G Model E.C.G Machine
3. Cera Gem Machine
(சூரிய ஒளிக்கதிர் சிகிச்சை மெசின்)
தொடர்பு (4395)
Dr: கண்ணா (சித்தன்கேணி)
077 602 8734

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பிரான்ஸ் | ரூ.1500/ரூ.1300 |
| ஜேர்மனி | ரூ.1500/ரூ.1300 |
| டென்மார்க | ரூ.1500/ரூ.1300 |
| கொலன்ட் | ரூ.1500/ரூ.1300 |
| பெல்ஜியம் | ரூ.1600/ ரூ.1300 |
| இத்தாலி | ரூ.1700/ ரூ.1450 |
| லண்டன் | ரூ.1500/ ரூ.1150 |

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள்
எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

லண்டன்-1000/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1500/=
சுவிஸ்- 1400/= . அவுஸ்ரேலியா- 1600/= / 1000/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 075 5522999 076 1221566 | பளை மன்னார் கொழும்பு 12

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.